# செம்பதாகை

மலர்: 1
இதழ்: 10
ஐப்பசி
1979
விலை சதம்: 50
புரட்சிகர வெகுஜன ஏடு

1979-11-14
PERIODICALS DIVISION
LIBRARY

## நிதி அமைச்சரின் வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில்

★ வருமானம் ரூ. 1202,96,77,000 ★ செலவினம் ரூ. 2338,75,26,326 ★ துண்டுவிழுவது ரூ 1135,78,49,326 ★ பாதுகாப்புக்கு மட்டும் ரூ 100கோடி 53லட்சம்

# அடுத்துநடக்கப்போவதுஎன்ன?

**யூ.என்.பி.** அரசாங்கம் பதவிக்கு வந்தபின் சமர்ப்பித்திருக்கும் மூன்ருவது வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் ஆயிரத்திநூற்றி முப்பத்தைந்து கோடியே எழுபத்தெட்டு லட்சத்து நாற்பத்தியொன்பதிஞயிரத்து முன்நூற்று இருபத்தியாறு ரூபா துண்டுவிழுந்துள்ளது. மிகப் பெரும் தொகையாகத் துண்டுவிழும் இப்பற்ருக்குறையை நிதி அமைச்சர் எவ்வாறு சமாளிக்கப்போகின்ருர் என்பதே மக்களமுன் தோன்றியுள்ள அச்சமாகும்.

வரவுசெலவுத் திட்ட மதிப்பீட்டில் ஏற்பட்டுள்ள பற்ருக் குறையை நிரப்புவதற்கு அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை உயர்த்துவதைத் தவிர வேறு மார்க்கம் நிதி அமைச்சருக்கு இருக்க முடியாது. அது நேரடியாகவும், மறைமுகமாகவும் நடைபெற்றேயாக வேண்டும். அதன் ஒரு பகுதி ஏற்கனவே நிறைவேற்றப்பட்டு விட்டது. மாவின் விலை உலகச் சந்தையில் அதிகரித்துவிட்டது எனவும், எண்ணெய் உற்பத்தி நாடுகளுக்குப் 'பெட்டிசம்' அனுப்பும் பிரசாரமும்; மிக விரைவிலேயே மாவினதும், எண்ணெய் விலைகளும் நிச்சயம் உயர்த்தப்படும் என்பதை உறுதிப்படுத்தியுள்ளன. எண்ணெய் விலையைச் சாட்டாக வைத்துக்கொண்டு போக்குவரத்துக் கட்டணங்களும் உயர்த்தப்படவுள்ளன என்பதையும் அரசு ஏற்கனவே மெதுவான குரலில் வெளிப்படுத்தியுள்ளது. இத்தோடு சீனியின் விலை ஏழு ரூபாவிற்கு அதிகரிக்கப்படலாம் என்ற ஊகம் அரசாங்க வட்டாரங்களிலிருந்து அறியப்படுகின்றது.

இவற்றையெல்லாம் மொத்தமாக பார்க்குமிடத்து மக்களின் அன்ருடப் பாவனைப் பொருட்களினதும், அத்தியாவசியப் பொருட்களினதும் விலைகள் மேன்மேலும் பன்மடங்கு உயர்த்தப்படுவதற்கான அபாய அறிவிப்பை வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் விழுந்துள்ள மிகப் பெரிய தொகையான பற்ருக்குறை சுட்டிக் காட்டுகின்றது. இதனுல் மக்களின் வாழ்க்கைத் தரம் படுமோசமாகக் கீழ்நோக்கிச் செல்ல உள்ளது. இதுவரை இலங்கை மக்கள் அனுபவித்திராத மோசமான பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டிய ஒரு இருள்சூழ்ந்த எதிர்காலத்திற்குள் எமது மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இதனுல் இலங்கை மக்கள் மத்தியில் ஏற்பட உள்ள விரக்தி, வெறுப்பு, எதிர்ப்பு ஆகியவற்றை எவ்வாறு சமாளிப்பது என்பதை யூ.என்.பி. அரசு முன்கூட்டியே உணர்ந்தபடியால்தான் இவ்வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் நூறுகோடியே ஐம்பத்தி மூன்று லட்சம் ரூபாவிற்த அதிகமான பணத்தை பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு ஒதுக்கியுள்ளது. இப்பெரும் தொகையான பணத்தில் ஆயுதப் படைகளின் விஸ்தரிப்புக்கும், நவீன ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்கும் ஆயுதப்படைகளை மேலும் ஸ்திரப்படுத்துவதற்கும் முடிவு செய்யப்பட்டுள்ளது. பாதுகாப்புக்கான இப்பெரும் தொகை பண ஒதுக்கீடு அந்நிய ஆக்கிரமிப்பு ஒன்றை எதிர்நோக்கி அல்ல என்பது எவரும் அறிந்ததே. அப்படியானல் யூ.என்.பி. அரசு தான் மக்களுக்கு எதிராக இழைத்து வரும் அநீதிகளுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுவதைத் தடுக்கும் நோக்குடனுன உள்நாட்டுப் பாதுகாப்பிற்கே என்பதும் தெளிவாகின்றது. இந்த பாதுகாப்பு என்பது மக்களது நியாயமான எதிர்ப்பு நடவடிக்கைகளிருந்து ஆளும் வர்க்கத்தையும் அதன் பிரதிநிதியான யூ.என்.பி. யையும் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டதேயாகும்.

இப்பொழுது நிதியமைச்சரின் பெரும் தொகையான பற்ருக்குறையும் அதை நிரப்புவதற்கு எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகளும் நிச்சயம் எமது நாட்டின் தொழிலாளர் விவசாய, சாதாரண புத்திஜீவிகளான உழைக்கும் மக்கள் அனைவரையும் பாரதூரமாகப் பாதிக்கும் நடவடிக்கையாகவே அமைய உள்ளது. இப்பாரதூரமான நடவடிக்கைகள் எமது மக்களை மேன்மேலும் பொருளாதார சுமைகளால் அழுக்கவே வழிகோலியுள்ளன.

இந்நிலையில் பொருளாதாரச் சுமைகளுக்கு எதிராகவும், அரசியல் அடக்குமுறைக்கெதிராகவும் உறுதியான குரல் மக்களின் பக்கத்தில் இருந்து கிளப்பப்படுவது மிக அவசியமாகும். இக்குரலானது சகல யூ.என்.பி.விரோத சக்திகளினது ஐக்கியப்பட்ட குரலாக அமைவது அவசியம் என்பதே எமது விருப்பமாகும்.

## ரூபா 55 சம்பள உயர்வு கொடுக்கமறுக்கும்

# கொடூரமுதலாளிகள்

கடந்த செப்டம்பர் மாதம் 1ஆம் திகதியிலிருந்து அரசாங்க - கூட்டுத்தாபன தனியார் துறையைச் சேர்ந்த சகலருக்கும் ரூபா 55 சம்பள உயர்வு வழங்கப்பட்டிருப்பதாக அரசாங்கம் அறிவித்தது. இவ்வறிவிப்பை அரசாங்கத் துறையினரும், அனேகமான கூட்டுத்தாபனங்களும் நடைமுறைப் படுத்தியிருக்கும் அதே வேளை ஒரு சில தனியார் நிறுவனங்களைவிட அனேகமானவை இதுவரை சம்பள உயர்வை வழங்க மறுத்து வருகின்றன. அரசாங்கம் பெயரளவில் ஒரு சட்டம் இயற்றியபோதும் பல முதலாளிகள் சட்டத்தை ஒரு தூசாக மதித்து சம்பள உயர்வை மறுத்து வருகின்றனர். இச்சம்பள உயர்வை மறுப்பது மட்டுமன்றி கடந்த வருடத்தில் வழங்கப்பட்ட ரூபா 50 சம்பள உயர்வைக்கூட இதுவரை வழங்காத முதலாளிகளும் நாட்டில் இருக்கவே செய்கின்றனர். கூட்டுறவு என்ற போர்வையில் கொள்ளையடிக்கும் சங்கங்களின் நிர்வாகங்கள்கூட கடந்த சம்பள உயர்வை வழங்க மறுத்து வருவதைக் காண முடிகின்றது. அக்காரிக்கையை வலியுறுத்தி பல கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் நாட்டின் பல பாகங்களிலும் வேலை நிறுத்தம் செய்ததை சகலரும் அறிவர்.

இன்று 55 ரூபா சம்பள உயர்வை மறுத்துவரும் கொடூர முதலாளிகள் தத்தமது தொழிற்சாலைகளில் தொழிலாளர்களை மிகக் குறைந்த சம்பளத்திலேயே கசக்கிப் பிழிந்து வேலைவாங்குகிறுர்கள். பத்து வயது தொடக்கம் இருபது வயதிற்கு உட்பட்ட சிறுவர்களிடம் வேலை வாங்கும் முறையானது மிகவும் கொடூரமானதாகவே இருக்கின்றது. கிட்டத்தட்ட பத்து மணித்தியாலங்களுக்கு மேல் வேலைவாங்கப்படும் இச்சிறுவர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் இரண்டு அல்லது மூன்று ரூபா மட்டுமே. இதைப் பற்றிக் கேட்டால் அவர்கள், சின்னப் பொடியள்தானே வேலை பழகின்றனர் என்ற சாட்டைச் சொல்லி முதலாளிகள் மழுப்பிவிடுகின்றனர். அதே வேளை அச்சிறுவர்கள் ஒருநாளைக்கு வேலைக்குச் செல்லாதுவிட்டால் இந்த முதலாளிகள் சீறிவிழுந்து நெருப்பில் மிதித்தவர்களைப்போல் நிற்பதைக் காண முடிகிறது. இதிலிருந்து தெரிவது என்னவெனில் சிறுவர்களை ஏமாற்றி கூடியளவு வேலையை வாங்கிக் கொண்டு குறைந்த சம்பளத்தைக் கொடுத்து தமது சுரண்டலை மிகவும் நாசுக்காக நடத்தி வருவதைத்தான். சுரண்டல் பேர்வழிகளான இக்கொடூர முதலாளிகள் தொழிலாளர்களுக்குச் சம்பள உயர்வை மறுக்கும் அதேவேளை தமது ஆடம்பரத்தையும், சுகபோக வாழ்க்கையையும் நாளாந்தம் பெருக்கிவருகின்றனர். இவ்

(8-ம் பக்கம் பார்க்க)

**முக்கிய அறிவித்தல்**

2-ம் பக்கம் பார்க்க

## தொழிற்சங்கத் தலைவருக்கு மந்திரிப்பதவி!

# தோட்டத் தொழிலாளிக்கு துப்பாக்கிச் சூடு!

கண்டி பல்லேகலை ராஜவெலத் தோட்டத் தொழிலாளியான வடிவேல் பழனிவேல் பலத்த துப்பாக்கிச் சூட்டுக்கு கடந்த வாரம் இலக்காகி உள்ளார், இச்சம்பவம் தனிப்பட்ட ஒரு பிரச்சினை அல்ல. இது தோட்ட நிர்வாகத்தின் திட்டமிட்ட செயல் என்றே நம்பப்படுகின்றது. அதிகாலையில் மலசலம் கழிக்கச் சென்ற தொழிலாளி பழனிவேல்மீது துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றிருக்கின்றது. ஏற்கனவே தோட்ட நிர்வாகத்திற்கும், தோட்டத் தொழிலாளர்களுக்கும் பிரச்சினைகள் இருந்து வந்துள்ளன. தோட்ட நிர்வாகத்தின் துப்பாக்கிப் பிரயோகம் என்பது மலையகத்தின் பல தோட்டங்களில் இன்று சர்வசாதாரணமாகவே நடைபெறும் சம்பவமாகிவிட்டது. வெள்ளைத்துரைமார்களுக்குப் பதிலாக கறுத்தத் துரைமார்கள் வந்த பின்பு தொழிலாளர்கள் அடக்கப்படுவது, பலிகொள்ளப்படுவது மேன்மேலும் உக்கிரமடைந்தே வருகின்றது. இன்றைய தோட்ட நிர்வாகங்களின் முதலாளி, அரசாங்கமேயாகும். அரசாங்கம் என்ற முதலாளியின் ஆணைகளையே தோட்ட நிர்வாகங்கள் அமுல்படுத்துகின்றன, எனவே தோட்ட நிர்வாகங்களின் தொழிலாளர்

(8-ம் பக்கம் பார்க்க)

**இன்றைய ஆளும் வர்க்கத்தால் நம்நாட்டு மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாது!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூ. என். பி. யும் - தமிழர் கூட்டணித் தலைவர்களும்

இந் நாட்டின் ஆட்சி பீடத்திற்கு எவ்வெப்போது யூ. என். பி. பதவிக்கு வருகின்றதோ அவ் அப்போதெல்லாம் தமிழ்த்தலைவர்கள் இனமொழி வித்தியாசங்களுக்கு அப்பால் தமது வர்க்க ஒத்துழைப்பைக் யூ. என். பிக்குக் கொடுத்து வந்திருக்கின்றனர். இன்றும் அதே வர்க்க ஒத்துழைப்பைக் கொடுத்து வருகின்றனர். இதை எவராலும் மறுக்க முடியாது.

கடந்த தேர்தலின் போது தமிழ்த் தலைவர்கள் தமது தனித் தமிழ் ஈழத்திற்கான பிரிவினைக் கோரிக்கையை முன் வைத்த போது தென் இலங்கையின் ஆட்சி பீடத்திற்கு வரும் யூ. என். பியோ அல்லது சிறீலங்கா சுதந்திரக் கட்சியோ தமிழினத்திற்கு எவ்வித உரிமைகளையும், தரமாட்டாது என்று கொள்கை முழக்கம் செய்தனர். சிறிலங்கா சீறிப் பாய்ந்து கொத்தும் பாம்பு எனவும், யூ. என். பி. இரகசியமாகக் கொத்தும் பாம்பு எனவும் வர்ணித்தனர். ஆனல் தேர்தல் முடிவடைந்து ஜே. ஆரும், யூ. என். பியும் பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றிய போது ஜனநாயகம் தப்பிப் பிழைத்து விட்டது எனவும், ஜே. ஆர். ஒரு பெரும் ஜனநாயகவாதி எனவும் வாயாரப் புகழ்ந்தனர். எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் அதற்கான சகல சலுகைகளையும் பெற்றுக் கொண்டனர். இடையிடையே தாம் அரசாங்கத்தை எதிர்ப்பதாகப் பாராளுமன்றத்தில் பேசிக் கொண்டனர். உறவை வலுப்படுத்தும் ஊடல் நடவடிக்கைகளில் தான் தமிழ்த் தலைவர்கள் ஈடுபட்டனர். இதை தமது யூ. என். பி. எதிர்ப்பும், தமிழ் இனப் பாதுகாப்பும் என வர்ணித்தனர். தமிழ்த் தலைவர்களின் உள்ளார்ந்த யூ. என். பி. ஆதரவிற்கும் வெளியில் பெயரளவிலான எதிர்ப்புக்கும் ஒரு உதாரணத்தைக் கூற முடியும். இன்றைய ஜனதிபதி ஆணைக்குழுவில் தமிழர் கூட்டணியின் பிரதிநிதியாக இருப்பவர் திரு. நீலன் திருச்செல்வம் ஆவார். தமிழர் கூட்டணியின் உயர் வர்க்கக் கொள்கை வகுப்போரில் இவரும் ஒரு பிரதானமானவர். இதே நீலன் திருச்செல்வம் யூ. என். பி.யின் அரசியல் பொருளாதார, சட்ட நடவடிக்கைகளின் பிரதான ஆலோசகர்களில் ஒருவர் எனவும் கூறப்படுகின்றது. ஆனல் தமிழர் கூட்டணி தாங்களும் யூ. என். பியை எதிர்ப்பதாகக் கூறிவருகின்றனர். உள்ளூர ஆதரவு, வெளியில் எதிர்ப்பு இது தான் இன்றைய தமிழ்த் தலைவர்களின் நடவடிக்கையாகும்.

## தணிக்கை

அதே வேளை தமிழ்த் தலைவர்களை அரவணைத்து வர்க்க

(6-ம் பக்கம் பார்க்க)

## முக்கிய அறிவித்தல்

செம்பதாகை மிகவும் பொருளாதாரக் கஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளது என்பதைச் சகல செம்பதாகை வாசகர்கள், ஆதரவாளர்கள், விற்பனையாளர்களுக்குத் தெரியப்படுத்துகின்றோம். ஆதலால் எதிர்வரும் நவம்பர் மாதத்தில் இருந்து செம்பதாகைக்கு **மாதாந்த உதவி நிதியாகவும், சாதாரண உதவி நிதியாகவும்** தங்களால் இயன்றளவு நிதி உதவி செய்து செம்பதாகையை உரிய காலத்தில் வெளி வருவதற்கு உதவி செய்ய வேண்டும் என சகலரையும் வேண்டுகின்றோம். அத்துடன் பத்திரிகை விற்பனைப் பணம் அனுப்பாதவர்கள் உடன் பணத்தை அனுப்பி வைக்கும் படி வேண்டப்படுகிறுர்கள்.

நிர்வாகக் குழு

**நிதி அனுப்ப வேண்டிய முகவரி**

நிர்வாகி
செம்பதாகை
15/1, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.

## "இடதுசாரிகளின் ஐக்கிய நடவடிக்கை!"

# வெறும் போலி விளையாட்டே

கொல்வின் ஆர். டி. சில்வா தலைமையிலான இலங்கைச் சமசமாஜக் கட்சி. விக்கிரமசிங்கா தலைமையிலான திரிபுவாதக் கம்யூனிஸ்ட் கட்சி, விஜயவீரா தலைமையிலான மக்கள் விடுதலை முன்னணி, வாசுதேவநாணயக்காரா தலைமையிலான புதிய சமசமாஜக் கட்சி, பாலாதம்புவின் புரட்சிகர மாக்சிஸ்ட் கட்சி ஆகிய ஐந்து கட்சிகளும் அதன் தலைவர்களும் தாங்கள் யூ. என். பிக்கு எதிராக ஐக்கியப்பட்ட நடவடிக்கைகளுக்கு முன் வந்திருப்பதாக மக்களுக்கு அறிவித்தார்கள். இது பெரியதொரு ஐக்கியம் எனவும், உண்மையிலேயே இடதுசாரிகளின் ஐக்கியம் எனவும் ஏமாந்த சிலரும் இருக்கவே செய்தனர். ஆனல் இந்த "இடதுசாரிகளில" கடந்தகால நடைமுறைகளை அவதானித்து வந்தவர்கள் இது ஒரு கண்துடைப்பு என்பதை மட்டும் புரிந்து கொண்டனர். இந்த ஐந்து இடதுசாரிகளும் தமது முதலாவது ஐக்கியப்பட்ட நடவடிக்கை என்று கூறி யூ. என். பியின் அத்தியாவசிய பொதுச் சேவைகள் மசோதாவிற்கு எதிரான ஒரு கூட்டத்தை ஒழுங்கு செய்தனர். கொழும்பு ஹைபாக் மைதானத்தில் நடைபெற்ற மேற்படி கூட்டத்திற்கு யார் தலைமை தாங்குவது என்பதில் பெரும் இழுபறிகள் நடைபெற்று கொல்வின் ஆர். டி. சில்வா தலைமை தாங்குவதை மக்கள் விடுதலை முன்னணி வன்மையாக எதிர்த்து இறுதியில் மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த கமணநாயக்கவே தலைமை தாங்கினர். இதனல் கொல்வின் கூட்டத்திற்கே வர மறுத்து அதாவுட செனிவிரத்தினவை அனுப்பி வைத்தார். கூட்டத்தில் பீற்றக் கெனமன் பேசிக் கொண்டிருந்த வேளை பார்த்து விஜயவீரா ஹீரோவாக மேடைக்கு அழைத்து வரப்பட்டார். திட்டமிட்ட இச் செயலால் பதினைந்து நிமிடங்கள் வரையில் பேச முடியாது போயிற்று. விஜயவீராவின் பேச்சு தங்களைப் பற்றிய வீரப்பிரதாபங்களாகவே அமைந்திருந்தது. இது "இடதுசாரி ஐக்கியம்" காண வந்திருந்த ஏராளமானவர்களுக்கு பெரும் ஏமாற்றத்தையும் வெறுப்பையும் கொடுத்தது. இதனல்மக்கள் இடையிலேயே கூட்டத்தை விட்டுச்செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டனர்

இந்த ஐந்து பகுதியினரும் அடிப்படையில் ரொட்சிச- திரிபுவாத ஒரு முனைவாதத் தத்துவப் போக்கை கடைப் பிடிப்பவர்கள் என்பதும் பாராளுமன்றத் தேர்தலை மையமாக வைத்துள்ளவர்கள் என்ற ஒற்றுமைக்குரிய அம்சத்தைக் கொண்டிருந்த போதிலும் இவர்கள் அண்மைக் காலம் வரை ஒருவரையொருவர் திட்டித் தீர்த்துக் கொண்டவர்களாவர். அண்மைக் காலம் வரை ஒருவரையொருவர் திட்டித் தீர்த்ததில் யார் சரி யார் பிழை என்பது பற்றி பொது விமர்சனமோ அன்றி சுய விமர்சனமோ இன்றி ஹைபாக் மைதானத்தில் ஒரு கூட்டத்தை வைத்து ஐக்கியத்தை ஏற்படுத்திவிட முடியாது என்பதை இவர்கள் உணராமல் விட்டது முட்டாள்தனமேயாகும். அதுமட்டுமன்றி விஜயவீராவின் மக்கள் விடுதலை முன்னணிக்கு இருக்கும் யூ.என்.பி. எதிர்ப்புணர்வு என்பது மிகப் பெரிய சந்தேகத்திற்குரியதொன்றேயாகும் ஏனெனில்

(6-ம் பக்கம் பார்க்க)

## ஒருமுதலாளியின் முழுநாள்......

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தப்பட்ட ஒரு போலி மாநாடு என்பது புலனுகின்றது.

அடுத்தது இம் மாநாடு அக்டோபர் 21 எழுச்சியின் நினைவு நாளில் நடத்தப்படுகின்றது எனக் கூறப்பட்டது. அக்டோபர் 21 எழுச்சியை முறியடிக்க முனைந்தவர்கள் பொலீஸ் படையினர் என்பது எல்லோரும் அறிந்ததே. ஆனல் அந்த புரட்சிகரமான எழுச்சிக்கு அபகீர்த்தி ஏற்படும்படியாக அதே தினத்தில் நடைபெற்ற "மாநாட்டைப்" பொலீஸ் படையினரே முழுநாளும் பாதுகாத்து நின்றனர். இதை விடக் கேவலம் வேறு எதுவும் இருக்க முடியாது. ஆனல் பொலீஸ் பாதுகாவலுடன் "மாநாடு", நடைபெற்றதிலும் வியப்படைவதற்கு ஒன்றும் இல்லைத் தான். ஏனெனில் அம் மாநாடு வெகுஜன இயக்கத்தின் மாநாடு அல்ல. அது ஒரு முதலாளியின் "மாநாடு" தானே.

அடுத்தது என்னவெனில் ஆயிரம் ஆசனங்களைக் கொண்ட வீரசிங்கம் மண்டபத்தில் உறுப்பினர், பார்வையாளர், சகோதரப் பிரதிநிதிகள், வெளியிடத்து பிரதிநிதிகள், தலைமைக் குழுவினர் எல்லாமாகச் சேர்த்து மொத்தம் எழுபத்தைந்து பேர் கூடத் தேறவில்லை என்பது பரிதாபகரமான உண்மையாகும். "அறிக்கை" வாசிப்பதிலும், "வாழ்த்துக்கள்" வாசிப்பதிலும் கூட இழுபறிகள்- அந்தோ பரிதாபம். இந்தப் பெரிய மாநாட்டில் பிரேரணைகள் சமர்ப்பித்தவரின் பெயரைப் பத்திரிகைகளில் அறிந்து இவரும் வெகுஜனத்தில் ஒருவரா என ஆச்சரியப்பட வேண்டியிருந்தது. உண்மையில் இம் முதலாளியின் மாநாட்டில் பிரேரணை சமர்ப்பித்தவர் முதலாளியின் மிகவும் விசுவாசமான ஒரு எடுபிடியாவார். இதை வெளியில் உள்ள எவரும் ஊகிக்க முடிந்தது.

அடுத்த சம்பவம் யாதெனில், வெகுஜன இயக்கப் போராட்டங்களுக்கு நேரடியாகவே எதிராக நின்று பிற்போக்கு வாதிகளுக்கும், சாதி வெறியர்களுக்கும் பொலிசாருக்கும் உதவி வந்த ஒருவர் எனத் தாழ்த்தப்பட்ட மக்களால் நிராகரிக்கப்பட்ட திரு எம். சி. சுப்பிரமணியம் இந்த மாநாட்டில் வீற்றிருந்து தனது நல்லாசிகளைத் தெரிவித்ததாகும். ஒரு கட்டத்தில் இந்த நபருக்கு எதிராக யாரோ ஒருவர் பேச முற்பட்ட சமயம் அவ்வாறு பேச வேண்டாமென தலைமைக் குழுவைச் சேர்ந்த என். ரி. என். நாகரெத்தினம் தடுத்ததாகவும் பத்திரிகையில் காணக் கூடியதாக இருந்தது. என்னே ஐக்கியம்! என்னே சங்கமம்! மாநாட்டு தலைமையுரையினதும் பேச்சுக்களினதும் பிரதான இலக்கு தேர்தலில் பங்கு கொள்வதும், சலுகைகளை எப்படியாவது பெற்று விட வேண்டும் என்பதாகவுமே இருந்தது.

பரிதாபத்திற்கும், படுகேவலத்திற்கும் உள்ளான இம் மாநாடு தோல்வியில் முடிவடைந்தது. இம் மாநாட்டை பல ரூபாய் செலவு செய்து நடத்திய பிரபல முதலாளிக்கு மாநாடு தோல்வி பற்றி சற்று மனம்கோணலாக இருந்தாலும் தனது தொழில் விருத்திக்கு ஒரு நல்ல விளம்பரம் என்ற வகையில் திருப்தியாகவேயிருக்கும் என்றே நம்புகின்றோம். யாழ்ப்பாணத்தில் ஒரு சவர்க்கார முதலாளி எவ்வளவு தானதரும நடவடிக்கையிலும், சமூக சமய தொண்டுகளையும் செய்து பட்டங்களுடன் உலாவிக் கொண்டு தனது தொழிலாளர்களை வாட்டி வதைத்து வருகிறுரோ அதே போல் தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சேவை செய்வதாகக் கூறிக் கொண்டு இந்த மாநாட்டை நடத்திய முதலாளியும் தனது தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்களை வாட்டி வதைத்து சொத்து சேகரிப்பதற்கும் 'மாநாடு' ஒரு நல்ல விளம்பரமாகும்.

இம் மாநாட்டின் தோல்வியின் பாடம் ஒரு விடயத்தை உறுதிப்படுத்தியுள்ளது. அதாவது பணபலத்தால், பணச் செருக்கால் எல்லாவற்றையும் சாதிக்க முடியாது என்பதாகும். சில விஷயங்களை மட்டும் சாதிக்க முடியும். ஆனல் ஒரு லட்சியம், சரியான கொள்கை, உண்மையான உணர்வு பூர்வமான இயக்கம் போன்றவற்றை எவ்வளவு பணத்தைச் செலவு செய்தும் உருவாக்கவோ நடத்திச் செல்லவோ முடியாது.

மாநாடு தோல்வியில் முடிவடைந்தது. மாலையில் நடைபெற்ற ஏதோ ஒரு நாடகத்திற்கு ஓரளவு பார்வையாளர்கள் இருந்தனர். நாடகம் என்பதற்காக மட்டுமே. இன்று ஒரு முதலாளியின் "முழு நாள் மாநாடு" முடிவடைந்து விட்டது. நூறு பேர் தேற முடியாத "மாநாட்டில்" நூறு பேர் பொதுச் சபையாம். படை இல்லாவிட்டாலும் தளபதி நானே என்பது போல் அந்த முதலாளி பத்திரிகைகளுக்கு அடுத்தடுத்து விளம்பரங்கள் கொடுத்தார். ஏதோ பெரிதாக நினைத்தவர்கள் மத்தியில் எல்லாம் ஒரே ஏமாற்றம். ஏமாற்றுத் தொடரவே செய்யும். ஏனெனில் இது சுரண்டல், சொத்து சேகரிப்போடு இணைந்தபடியினுல் இடையில் நிறுத்துவது கடினமாகவே இருக்கும்.

இவ்விமர்சனம் அம்மாநாட்டில் கலந்துகொண்ட ஓரிரு நல்லெண்ணம் கொண்டவர்களுக்கு விதிவிலக்காகும்.

## ஒரே நேரத்தில் இடதும் வலதும் !

இவ்வாறு தலைப்பிட்டு கீழ் வரும் விஷயத்தை உங்களுக்கு தெரியப்படுத்தும் போது நீங்கள் ஆச்சரியப்படக் கூடும் ஆனல் நடந்தது உண்மையாகும். அதாவது யூ. என். பி. அரசாங்கம் தொழிலாளி வர்க்கத்தின் வேலை நிறுத்தம் செய்யும் உரிமையை ரத்து செய்வதற்கான அதிகாரத்தை ஜனதிபதிக்கு வழங்கும் அத்தியாவசியப் பொதுச் சேவைகள் மசோதாவை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்திருந்தது. இதை எதிர்த்து சகல புரட்சிகர இடதுசாரி, முற்போக்கு, ஜனநாயக சக்திகள் குரல்கொடுத்தன. கொல்வின் தலைமையிலான சமசமாஜக் கட்சியும் தடல் புடலாக எதிர்ப்பதாகக் கூறிக் கொண்டது. ஆனல் அரசாங்கம் அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டமூலம் நாட்டு மக்களுக்கு மிகவும் நல்ல தொன்றே எனப் பத்திரிகை முழுப்பக்க விளம்பரம் கொடுத்தது. சகல முதலாளித்துவப் பத்திரிகைகளும் முழுப்பக்க விளம்பரம் வெளியிட்டன. இதில் வியப்புக்குரியதென்னவெனில் சமசமாஜக் கட்சியின் நாள் இதழான "ஜனதின" பத்திரிகையும் அரசாங்கத்தின் முழுப்பக்க விளம்பரத்தை வெளியிட்டது, பத்திரிகையின் ஒரு பக்கத்தில் மசோதா அநீதியானது என்றும் மறுபக்கத்தில் நீதியானது என்றும் குறிப்பிட்டிருந்தது. இதுதான் ரொட்சீசத்தின் ஒரே நேரத்தில் இடதும் வலதுமான கொள்கையாகும்.

**இனவேறுபாடுகளைத் தூண்டுவது வர்க்க வேறுபாடுகளை மறைப்பதற்கேயாகும்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்டோபர் 21 எழுச்சியும்

# அதன் அரசியல் தாக்கங்களும் —வெகுஜனன்

1966ம் ஆண்டு அக்டோபர் 21 எழுச்சியானது சாதி அடக்குமுறைக்கும், தீண்டாமைக் கொடுமைகளுக்கும் எதிரான புகழ் மிக்கப் போராட்டங்களின் முன் எழுச்சிமட்டுமன்றி, சமுதாய அடித்தளத்தில் அமுக்கப்பட்ட நிலையில் வாழ்ந்த உழைக்கும் மக்களின் ஒரு புரட்சிகர வர்க்க எழுச்சி என்பதும் மறுக்க முடியாத ஒன்றாகும். அக்டோபர் 21 எழுச்சி கம்யூனிஸ்ட் கட்சியின் நேரடித் தலைமையில் நடைபெற்றது. எனவே அவ் எழுச்சி உருவாக்கிய ஒவ்வொரு, போராட்டத்தின் தாக்கங்களிலும் பாட்டாளிவர்க்க அரசியல் முத்திரை என்பது பதிந்திருக்கவே செய்தது. ஒரு சரியான பாட்டாளி வர்க்கக் கட்சியின் சகல அம்சங்களும் பரந்த வெகுஜனப் போராட்டங்களில் தான் பரீட்சிக்கப்பட்டு புடம் போடப்படுகின்றது என்பதைக் கடந்த பதின் மூன்று ஆண்டுகளின் அநுபவம் நமக்கு நன்கு எடுத்துக் காட்டியுள்ளன. இந்த அநுபவத்தை முழுக் கட்சியும் பெற்றுக் கொள்ளாததும், அவ்வாறு சிறந்த அநுபவங்களை பெற்று உண்மையான பாட்டாளிவர்க்கக் கட்சியாக மாற விடாது தடுத்ததும் சண்முகதாசனின் தவறான நிலைப்பாடு என்பதை இன்று சகலரும் ஏற்றுக் கொள்கின்றனர். அக்டோபர் எழுச்சியையும் அதைத் தொடர்ந்த வீரமும், தியாகமும் நிறைந்த போராட்டங்களையும் அரசியல் அனுபவங்களாகக் கொண்டு, கட்சியைப் பரந்த அளவில் கட்டி எழுப்புவதற்குப் பதிலாகச் சண்முகதாசன் தனது பெயருக்கும்- புகழுக்குமான வெறும் பேச்சுகளுக்கும் அறிக்கைகளுக்கும் மட்டுமே பயன் படுத்திக் கொண்டார். தனது எதிர்ப்புரட்சிகர நிலைப்பாட்டின் காரணமாக இன்று நாட்டு மக்களால் நிராகரிக்கப்பட்ட சண்முகதாசன் வட பகுதியில் கடந்த காலத்தில் கட்சியின் வட பிரதேசக் கமிட்டி தலைமைதாங்கி எண்ணற்ற இன்னல்களின் மத்தியில் நடத்திய போராட்டங்களுக்கு சொந்தம் கொண்டாடியபடி தனது பெயரை நாலு பேர் மத்தியில் பாதுகாத்து விடலாம் என முயலுகின்றார். அவரது முயற்சிக்கு அவருக்கு அடிமை விசுவாசம் தெரிவிக்கும் ஓரிருவர் சம்பந்தமில்லாத இடங்களில் எல்லாம் சண்முகதாசன் பெயரைக் குறிப்பிட முற்பட்ட போதிலும் உண்மை எவையெனத் தெரிந்த மக்கள் எந்தப் பொய்யையும் நம்பத் தயாரில்லை. அக்டோபர் 21 எழுச்சிக்கான சட்டவிரோத ஊர்வலத்தைக் கைவிட்டு வெறும் பொதுக் கூட்டத்தை மட்டும் நடத்த வேண்டும் என்ற சண்முகதாசனின் தவறான ஆலோசனை தொடக்கம், கட்சியின் வட பிரதேசக் கமிட்டி ஒவ்வொரு எழுச்சியின் போதும்- போராட்டத்தின் போதும் கடைப்பிடித்த சரியான நடைமுறைகளுக்கு எதிராக தனது தவறான நிலைப்பாட்டை திணிக்க முயன்றார். சாதி தீண்டாமைக்கு எதிராக பரந்த சக்திகளை ஐக்கியப்படுத்தும் நோக்குடன் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் உருவாக்குவதற்கு கட்சியின் வட பிரதேசக் கமிட்டி தீர்மானித்த போதும் சண்முகதாசன் அவ்வாறான வெகுஜன ஸ்தாபனம் இன்றி நேரடியாகவே கட்சியின் பெயரில் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்ற தனது ரொட்சீச ஒருமுனை வாதத்தை முன் வைத்தார். அன்றைய அவரது வெகுஜன ஸ்தாபனம்பற்றிய கண்ணோட்டம் ஒரு கட்சியின் ஐக்கிய முன்னணி பற்றிய கண்ணோட்டத்திற்கு நேர் விரோதமானதாக இருந்ததை அவதானிக்க முடிந்தது. ஆனால் சண்முகதாசனின் தவறான கருத்துக்களை காலத்திற்குக் காலம் நிராகரித்த கட்சியின் வட பிரதேசக் கமிட்டியின் பெரும்பான்மையினர் வெகுஜனப் போராட்டங்களை பல்வேறு தந்திரோபாயங்களுக்கு மத்தியில் வெற்றிகரமாக முன்னெடுத்தனர்.

அக்டோபர் 21 எழுச்சி காட்டிய பாதையில் வெடித்துக் கிளம்பிய வெகுஜனப் போராட்டங்கள் தீண்டாமையையும்- சாதியையும் குறிவைத்துத் தாக்கிய அதே வேளை கட்சியைதத்துவார்த்த வலிமை பெற்றதாக்கியது விஷேச அம்சமாகும். நவீன திரிபுவாதத்தை வட பகுதியில் ஊடுருவதற்கு எதிராகவும், மாக்சிசம்- லெனினிசம்- மாசேதுங் சிந்தனை பரந்த அளவில் மக்கள் மத்தியில் முன்னெடுக்கப்படுவதற்கும் அவ் வெகுஜனப் போராட்டங்கள் வழி வகுத்தன. இப் புரட்சிகரப் போராட்டப் புயலுக்கு முகம் கொடுக்க முடியாது கட்சிக்குள் இருந்து வந்த வரட்டு வேதாந்த வாதிகளும் திண்ணைப் பேச்சு வீரர்களும் ஒதுங்கிக் கொண்டனர். அதே வேளை அடிமட்ட மக்கள் மத்தியில் இருந்து போராட்டங்களால் பரீட்சிக்கப்பட்ட இளம் சக்திகள் படிப்படியாக முன்னேறி கட்சியின் வழி நடத்தும் சக்தியாக மாற்றமடைந்தன. ஒப்பீட்டுவகையில் பார்க்கும் போது 1966ம் ஆண்டில் கட்சிக்குள் புத்திஜீவிகளினதும் திண்ணை வேதாந்தம் பேசுவோரினதும் நிலை கூடியதாக இருந்தது. ஆனால் இன்று மூன்றில் இரண்டுக்கு மேல் கடந்த வெகுஜனப் போராட்டங்களின் பல்வேறு அம்சங்களாலும் பரீட்சிக்கப் பட்ட உழைக்கும் மக்கள் மத்தியில் இருந்து வந்த சக்திகளால் கட்சி பலம்பெற்று நிற்பதைக்காண முடிகின்றது. உண்மையான பாட்டாளி வர்க்கத்தின், உழைக்கும் வெகுஜனங்களின் அபிலாசைகளுக்கான ஒரு கட்சி பலமடைந்து வருகின்றது. அது பாட்டாளி வர்க்கக் கட்சி என்பதாலும், சரியான தத்துவார்த்த நிலைப்பாட்டிலும், கொள்கை உறுதிப்பாட்டிலும், லட்சியப் பற்றிலும் கால் ஊன்றி நிற்பதாலும் அதன் பலம் பன்மடங்காக விளங்குகின்றது. அதற்கிருக்கும் பலத்தை சண்முகதாசன் போன்ற மெத்தப் படித்த கனவான்களுக்கு எதிரான தத்துவார்த்த- அரசியல் போராட்டத்தில் காணக்கூடியதாக இருக்கின்றது. எனவே இத்தகைய பலத்தின் தோற்றுவாய் அக்டோபர் 21 எழுச்சி என்று கூறினல் மிகையாகாது. ஏனெனில் அக்டோபர் 21 எழுச்சியும் அது உருவாக்கிய வெகுஜனப் போராட்டங்களும் தான் எமது கட்சியின் அரசியல் வரலாற்றில் எண்ணற்ற அனுபவங்களை தந்து பலம் பெறச் செய்தன என்பது சரித்திர உண்மை.

எனவே அக்டோபர் 21 எழுச்சியும் அது சார்ந்த வெகுஜனப் போராட்டங்களின் தன்மையையும் இரண்டு அம்சங்களில் எடுத்துக் கொள்வது அவசியமாகும், ஒன்று தீண்டாமைக் கொடுமைகளையும் சாதி அடக்குமுறைகளையும் எதிர்த்து அதுவரை நடைபெற்றிராத அளவுக்கு விட்டுக் கொடுக்காத போராட்டங்களை முன்னெடுத்து ஐந்து லட்சம் தாழ்த்தப்பட்ட மக்களை தலைநிமிர்ந்து நடக்கச் செய்தது. அந்த மக்கள் எவருக்கும் இரண்டாம்தரப் பிரஜைகள் அல்லர் என்பதை நிலைநாட்டி அவர்களுக்கு மறுக்கப்பட்டு வந்த மனித உரிமைகளை வென்றெடுத்ததாகும். அத்தோடு பல்வேறு பகுதிகளாகச் சிதறிக் கிடந்த தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் மட்டுமன்றி, தீண்டாமையையும் சாதி அமைப்பையும் எதிர்த்த வர்க்கரீதியில் ஐக்கியப்பட வேண்டிய சகல சக்திகளையும் அரசியல் ரீதியில் ஐக்கியப்படுத்தியதாகும்.

இரண்டாவது கம்யூனிஸ்ட் கட்சி உண்மையான பாட்டாளி வர்க்கக் கட்சி என்பதற்கான சிறந்த அனுபவங்களைப் பெற்றுக் கொண்டதாகும், தத்துவார்த்த அரசியல், ஸ்தாபன மார்க்கங்களிலும், போராட்ட அனுபவங்களிலும், ஐக்கிய முன்னணி தந்திரோபாய வழிகளிலும் அக்டோபர் எழுச்சி காட்டிய பாதை கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஒரு சிறந்த அடித்தளத்தை உருவாக்கியது. அதுமட்டுமன்றி ஒரு வெகுஜனப் புரட்சிகரப் போராட்டங்களில் மக்களின் வீரதீரம், தியாகம், போராட்டத்துணிவு, போராட்டத் தந்திரோபாயம், தலைமை தாங்கும் வல்லமை. இறுதிவரை விட்டுக் கொடுக்காத போராட்டம் போன்ற அம்சங்களையும் உள்ளடக்கியிருந்தது. இவை ஒரு பிரதேச எல்லைக்குள் இன்றி தேசிய விடுதலைக்கான ஒரு பரந்த பாதையையும் சுட்டிக்காட்டி நின்றதை புரட்சிகர சக்திகளால் உணரக் கூடியதாக இருந்தது.

எனவே அக்டோபர் 21 எழுச்சியின் அரசியல் தாக்கங்களை உண்மையானபாட்டாளி வர்க்க அரசியல் கண்ணோட்டத்தில் மேலும் முன்னெடுத்து எமது அரசியல் மார்க்கத்தை மேலும் உறுதியாக்கிக் கொண்டு இடது கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழ் மேலும் அணிதிரண்டு எதிர்கால நடவடிக்கைகளை முன்னெடுப்போம்!

## அன்றும் இன்றும்

"தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் எமது முன்னணித் தோழர்களில் ஒருவராவர். செங்கொடி வாலிபர் சம்மேளனத்தின் யாழ் பிரதேசத் தலைவர். எமது கட்சியின் யாழ்- பிரதேசக் கமிட்டியின் தலைமையின் கீழ் சாதி அடக்குமுறைக்கு எதிராகவும், தீண்டாமைக்கு எதிராகவும் நடத்தப்பட்ட வெகுஜன இயக்கத்திற்கு சரியான தலைமை அளித்தவர். இதன் மூலம் அவர் உயர் சாதி மக்களின் பிற்போக்குப் பகுதியினரதும் அவர்களின் காவல் நாய்களினதும் தணியாத வெறுப்பையும் தேடிக் கொண்டவர். மேதின ஊர்வலத்திற்கு தலைமை தாங்கிச் சென்ற தோழர் சுப்பிரமணியத்தின் மீது யாழ்ப்பாணத்தில் பொலீசார் மிருகத்தனமாக தமது காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை நடத்தி தமது "உயர் சாதி" பழியைத் தீர்த்துக் கொண்டனர். ஈவிரக்கமற்ற முறையில் அடித்து நொறுக்கினர். தமது கைகளைத் தூக்க முடியாத நிலையில் தோழர் மணியம் உள்ளார்.

இவ்வாறு திரு. சண்முகதாசன் (தொழிலாளிப் பத்திரிகையில்) 1969ம் ஆண்டு மே மாதம் வெளியிட்டுள்ள தனது நீண்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அன்று சாதி- தீண்டாமைக்கு எதிரான போராட்டத்திற்கு சரியான தலைமை அளித்தவர் என்றுகூறப்பட்ட தோழர் மணியத்தைப் பற்றி இன்று மிகக் கேவலமான முறையில் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் அவர் உயர் சாதி, நாங்கள் கீழ் சாதி என்று கூறும் அளவிற்கு தங்களைத் தாங்களே தாழ்த்திக் கொண்டுள்ளனர். இது சண்முகதாசன் கும்பலின் அரசியல் வெறுமையையும், முடிவுகாலச் சன்னிப் பிதற்றலையையுமே எடுத்துக் காட்டுகின்றது.

# ஒரு முதலாளியின் 'முழுநாள் மாநாடு'

கடந்த 21ம் திகதி யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் ஒரு "முழு நாள் மாநாடு" நடைபெற்றது. இம் மாநாட்டை யாழ் நகரத்தைச் சேர்ந்த பிரபல முதலாளி ஒருவர் நடத்தினர். இந்த முதலாளியின் மாநாட்டிற்கு ஒரு பெரும் வியாபாரியும், அந்த முதலாளியின் சில எடுபிடிகளும், கொடுக்கல் வாங்கல்காரர்களும், சில வாடிக்கையாளர்களும். அவரிடம் கை நீட்டி வாங்கியபடியால் "கடமைப்பட்டவர்கள்" சிலரும், முகம் மறுக்க மாட்டாத சில அப்பாவிகளும், தமது எதிர்கால வாழ்வுக்கு அந்த முதலாளியை அண்டி நிற்பவர்களும் மட்டுமே வருகை தந்திருந்தனர். இந்த முதலாளியினதும் அவரது எடுபிடிகளினதும் பிரதான நோக்கம் போராட்ட வரலாறு கொண்ட வெகுஜன இயக்கத்தின் பெயரில் ஒரு மாநாட்டை நடத்தி அதில் முக்கிய பதவிகளைப் தட்டிக் கொண்டு அதன் பெயரால் தமது சுயநல வேட்கையை தொடர்ந்து மேன்மேலும் சொத்துக்களைத் தேடிக் கொண்டு சுகபோக வாழ்க்கை நடத்துவதேயாகும். இந்த உண்மையை முன் கூட்டியே உணர்ந்தபடியினால் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின உண்மையான பொதுச் சபை சார்பாக இந்த "மாநாட்டை" அம்பலப்படுத்தியும், நிராகரிக்கக் கோரியும் ஒரு அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது. அவ்வறிக்கையில் கூறப்பட்டிருந்த விஷயங்கள் எவ்வளவு உண்மை என்பதை இந்த முதலாளியின் "மாநாட்டின்" பின்பு தெளிவாகக் காணக் கூடியதாக இருந்தது.

இந்த "மாநாடு" உண்மையான வெகுஜன இயக்க மாநாடு அல்ல என்பதையும் ஒரு முதலாளியினதும் அவரது சகபாடிகளினதும் தேவைக்கே நடத்தப்பட்டதொன்று என்பதையும் நன்ருக அவதானிக்கக் கூடியதாக இருந்தது. உண்மையில் வெகுஜன இயக்கத்தைச் சேர்ந்தோர் மாநாடு நடத்தியிருந்தால் அது நான்காவது மாநாடு என்றே நடந்திருக்க வேண்டும். ஏனெனில் மூன்ருவது மாநாடு 1973ம் ஆண்டு அக்டோபர் 21ல் நடந்து முடிந்து விட்டது. கடந்த மூன்று மாநாட்டு விபரங்களையும் உண்மையான வெகுஜன இயக்கத்தினுல் மட்டுமே தெரிந்திருக்க முடியும், எனவே இம் மாநாடு வெகுஜன இயக்கத்தோடு சம்பந்தம் இல்லாதவர்களால் [illegible]

## இதோ உண்மை விபரம்

### தீண்டாமை ஒ. வெ. இயக்கத்தின்

★ 1வது மாநாடு
21-10-1967
யாழ் நகர மண்டபம்
தியாகி சின்னர் கார்த்திகேசு அரங்கு

★ 2வது மாநாடு
17-1-1969
யாழ்- நகர மண்டபம்
தியாகி இரத்தினம் அரங்கு

★ 3வது மாநாடு
21-10-1973
யாழ் வீரசிங்கம் மண்டபம்

★ 4வது மாநாடு
விரைவில்
நடைபெறும்!!

போலிப் புரட்சிவாதிகளின் தன்மை, உள்ளத்தில் சுயநலமும் உதட்டில் பொதுநலமுமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்.எம். பெரேரா பற்றிய — ஒரு மதிப்பீடு

யுத்தகால வீரர்களுக்கு மரணத்தின் பின்னர் விருதுகள் வழங்கி கௌரவிப்பதில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் பெயர் பெற்றது என்று கூறப்படுவதுண்டு. நம்நாட்டு மக்களும், தேசிய வீரர் ஒருவர் ஏமாற்றம் அளித்து விட்டார் என்பதற்காக அவர் உயிரோடு இருக்கும் வரை பல வகையிலும் ஒதுக்கித்தள்ளி விட்டு, மரணத்திற்குப் பின்னால் வாயாரப்புகழ்ந்து பேசும் பெருமைக்கு இப்பொழுது உள்ளாகி வருகிறார்கள் போலும்.

கலாநிதி என். எம். பெரேராவின் மரணத்தின் பின் அடிமைப்புத்தி கொண்ட மக்கள் தொடர்புசாதனங்களின் ஆதரவுடன் ஜனாதிபதியினால் முடுக்கிவிடப்பட்ட வெகுஜன உணர்ச்சிப் பிரவாகமானது இப்பொழுது தணிந்துள்ள வேளையில் மறைந்த சமஜமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி என். எம். பெரேராவின் நடவடிக்கைகளை இப்பொழுது சற்று நிதானமாக அலசிப்பார்க்கலாம்.

லஸ்கியவாதம், ட்றொட்ஸ்கியவாதம் ஆகிய இரண்டும் புத்திஜீவிகளுக்குக் கவர்ச்சியாகவிருக்கலாம், ஆனால் இரண்டுமே தொழிலாளர் இயக்கங்களின் அழிவுக்கு வழிவகுப்பவையாகும் எனவே இந்த இரண்டு கொள்கைகளாலும் பாண்டியத்தியம் பெற்றவராக கலாநிதி என். எம். பெரேராவின் கொள்கைகள் அவர் மீது நம்பிக்கை வைத்த மக்களைக் கண்மூடித்தனமாக கூட்டணிகளுக்கு இழுத்துச் செல்வதற்கும், தொழிலாளர் வர்க்க இயக்கத்தை அதன் தற்போதைய பலவீனமான- குழப்பகரமான நிலைக்குள்ளாக்கவும் காரணமாக அமைந்தன என்பது ஆச்சரியத்துக்குரிய விஷயமன்று. தேசாபிமானிகள் என்றழைக்கப்பட்ட நம்மவர்கள் டொமினியன் அந்தஸ்து பற்றி பேசிக்கொண்டு, ஏகாதிபத்திய மேசையிலிருந்து விளக்கூடிய மிச்சத் துண்டுகளுக்காகக் காத்திருந்த சமயத்தில் கலாநிதி என், எம். பெரேரா உத்வேகமூட்டி பூரணச் சுதந்திரத்தை நோக்கி துணிச்சலுடன் சுதந்திரப் போராட்டத்தை இட்டுச் சென்றார் என்பது உண்மைதான். ஆனால் தொழிலாளர் ஆட்சி தொடர்பான அவரது பிஞ்சில் பழுத்த ட்ராட்ஸ்கிய கோஷங்களும் முதலாளித்துவத்திற்கு எதிரான போராட்டங்களும் ஏகாதிபத்தியத்துக்கும், நவகாலனித்துவத்துக்கும் சமூக ஏகாதிபத்தியத்துக்கும் எதிராக சகல தேசபக்த சக்திகளும் கூட்டணியாக ஒன்றிணைவதைத் தடுத்து விட்டது. தொழில்துறை மோசடியாளர்கள் (இவர்களுக்கெல்லாம் இப்பொழுது ஞாபகார்த்தசிலைகள் நிறுவப்படுகிறது) முதலாளிகளிடமும் தொழிலாளிகளிடமும் ஒரே விதத்தில் 'முட்டிக்காசு' சேர்க்கிறார்கள் என்பது உண்மைதான். கலாநிதி என்.எம். பெரேரா வர்க்க உணர்வையும் தொழிலாளர் இயக்க எதிர்ப்புச் சக்தியையும் வளர்க்க முன் வந்தார். என்றாலும் அவரது ட்றொட்ஸ்கிஸம் இந்த இயக்கத்தை மாற்றத்துக்குரியதாகவும், எதிர்ப்புச் சக்தியிருந்தாலும் புரட்சிகரமற்றதாகவும் ஆக்கிவிட்டது. இந்த நாட்டில் சோஷலிச எண்ணங்களையும் தத்துவங்களையும் முதலில் அறிமுகப்படுத்தியவர்களில் அவரும் ஒருவர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவரது ட்ராட்ஸ்கியவாதத்தின் காரணமாக சோஷலிசம் என்றாலே இந்த நாட்டில் இன்று ஒரு அசிங்கமான வார்த்தையாகக் கருதப்படுகின்றது.

உழைப்பாளர்களைத் தவிர்ந்த ஏனைய சகல வர்க்கத்தினருக்கும் எதிராக எல்லா முனைகளிலும் போர்தொடுப்பது என்ற கோஷமானது. ஏனைய எல்லா வர்க்கத்தினரையும் தொழிலாளர்களுக்கு எதிராகத் தூண்டி விடுவதற்கே உதவி புரிந்துள்ளது. சோவியத்யூனியனில் ஸ்டாலின் தலைமையில் சோசலிசம் கட்டி எழுப்பப்படும் போதும் பாசிஸத்துக்கு எதிராகக் கடும் போராட்டம் நடந்து கொண்டிருந்த பொழுதும், அந்த நாட்டை எதிர்த்து நின்றுவிட்டு, அது திரிபுவாதத்தை மேற்கொண்டு ஏகாதிபத்திய மேலாதிக்க வல்லரசாக மாறிவிட்ட வேளையில் பார்த்து ஆதரிக்கத் தொடங்கியதான அவரது ட்ராட்கிஸிய வாதத்தின் தாத்பரியம் எப்படிப்பட்டதென்பதைப் புரிந்து கொள்ளலாம்.

—நமது நிருபர்—

கலாநிதி என். எம். பெரேரா திறமை வாய்ந்த பாராளுமன்ற வாதியாக விளங்கினார் என்பதிலும் எந்த விதச் சந்தேகமும் கிடையாது கலாநிதி ஐவர்ஜென்னிங்ஸ் நமது நாட்டை விட்டுச் சென்றதற்கு ஒரு காரணம் சொல்லப்படுவதுண்டு. பாராளுமன்ற விளையாட்டில் கலாநிதி என். எம். பெரேரா தம்மை விட கெட்டிக்காரராய் இருப்பதை கலாநிதி ஜென்னிங்ஸ் கண்டுகொண்டாராம். கலாநிதி என். எம். இருக்கும்வரை ஏகாதிபத்தியமும் நவ காலனித்துவமும் பாதுகாப்பாக இருக்கும் என்று ஜென்னிங்ஸ் கருதினாராம். கலாநிதி என். எம். இந்த உண்மையை நிறைவேற்றுவதில் சகல விதத்திலும் தகுதி பெற்றிருந்தார் என்பது உண்மைதான். சென் தோமஸ், ஆனந்தா கல்லூரிகளில் கல்வி பயின்று லண்டன் பொருளாதாரக் கல்லூரிகளிலும் பேராசிரியர் லாஸ்கியினாலும் பொருளாதாரம், அரசியல் யாப்புச் சட்டமும், பாராளுமன்ற நடைமுறையும் பற்றியெல்லாம் பயிற்சி பெற்றவரான இவர் பூர்ஷ்வா ஜனநாயக விளையாட்டு சரியாக நடைபெறுகிறதா என்பதைக் கவனித்துக் கொள்வதில் நிபுணராக விளங்கினார். இதிலுள்ள வரலாற்று முரண்பாடு என்னவென்றால், ஒரு பாராளுமன்ற அமைப்புக்கு எதிராக ஆரம்பத்தில் ஆக்ரோஷமாக மூச்சுவிட்ட ஒரு கட்சியானது அதே பாராளுமன்ற சகதியில் ஆழமாகத் தன்னைப்புதைத்துக் கொண்டு விட்டதன் பின் அதன் மகத்தான தலைவரின் மறைவுக்கு முன்னரே ஒரு பாராளுமன்றத் தேர்தலில் முற்றுமுழுதாக நிராகரிக்கப்பட்டது. என்பதுதான். முதலாளி வர்க்கத்தின் முன்னணித் தலைவரான ஜே. ஆர். கலாநிதி என் எம். மை வானளாவப் புகழ்ந்து பேசியதும், தனது மூன்று முக்கிய நண்பர்களில் ஒருவர் என்று குறிப்பிட்டதும், வழமையாகப் பிரதம மந்திரிகளுக்கே வழங்கப்படும் இராஜாங்க மரியாதைகளுடன் இறுதிச் சடங்குகளுக்கு உத்தரவு விட்டதும் கவனத்தில் கொள்ளத்தக்கவை. கட்சியின் தலைமையை என். எம். முக்குப் பிறகு கையேற்றிருக்கும் கொல்வின் ஆர்டி சில்வா அந்த மூவரில் உயிர் வாழும் ஒரு நண்பர் என்று ஜே. ஆர். கூறியிருப்பதினால் ட்ராட்ஸ்கியத்தை முதலாளித்துவ வாதிகள் எந்த அளவில் கணித்து வைத்திருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

# அன்வர் ஹோசாவும் சண்முகதாசனும்

கடந்த வருடத்தின் நடுப்பகுதியில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் மிகவும் முக்கியமான தத்துவார்த்த- அரசியல் போராட்டம் ஒன்று நடைபெற்றதை யாவரும் அறிவர். இப் போராட்டத்தில் கட்சிக்குள் இருந்த உண்மையான மாக்சிச- லெனினிச வாதிகள் சண்முகதாசனின் எதிர்ப்புரட்சிகரத் தத்துவ நிலைப்பாட்டின் சுயரூபத்தை முற்று முழுதாக அம்பலமாக்கி நிராகரித்தனர். அதன் அடிப்படையில் உண்மையான மாக்சிச- லெனினிச வாதிகள் ஒன்றிணைந்து தொழிலாளி வர்க்கக்கட்சியாக இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) என்ற பெயரில் மாக்சிச லெனினிசக் கட்சியையும் அமைத்துக் கொண்டனர்.

மேற்படி நடைபெற்ற தத்துவார்த்த அரசியல் போராட்டத்தில் தலைவர் மாஓவினால் முன் வைக்கப்பட்ட மூன்றுலகக் கோட்பாட்டைக் ஒரு எதிர்ப்புரட்சிகரப் கோட்பாடு எனவும், தற்போதைய சீனக்கட்சியின் தலைமை தவறானது எனவும், சீனா ஒரு திரிபுவாத நாடாக மாறிவிட்டதெனவும் சண்முகதாசன் வாதிட்டு தனது சுயரூபத்தை அதில் வெளிப்படுத்திக் கொண்டார். தனது இவ் எதிர்ப் புரட்சிகரத் தத்துவ நிலைப்பாட்டிற்கு முற்று முழுதாக அல்பேனியக் கட்சியினதும் அன்வர்ஹோசாவினதும் தத்துவ அரசியல் மார்க்கங்களில் மிகவும் உறுதியாகக் காலூன்றி நின்றார். அல்பேனியக் கட்சி சிறிய கட்சியானாலும் மிகச் சரியான மாக்சிச- லெனினிசக் கட்சி எனவும், அன்வர் ஹோசா ஒரு மாபெரும் மாக்சிச லெனினிச வாதி எனவும் திரு சண்முகதாசன் ஏற்றிப் புகழ்ந்தார். கடந்த நவம்பர் மாதத்தில் அல்பேனியத் தேசிய தினத்திற்கு எனி மேல் இல்லை என்ற வார்த்தைப் பிரயோகங்களை எல்லாம் ஒன்று சேர்த்து ஒரு பெரும் நீண்ட வாழ்த்து மடலையும் சண்முகதாசன் அன்வர்ஹோசாவிற்கு அனுப்பி வைத்தார். இவ்வளவிற்கு ஏற்றிப்போற்றி வைத்திருந்த சண்முகதாசனுக்கு அன்வர் ஹோசா பெரும் ஏமாற்றத்தை அளித்தது மட்டுமன்றி சண்முகதாசனின் கண்டனத்திற்கும் ஆளாகியுள்ளார். மிக அண்மையில் திரு சண்முகதாசன் அன்வர் ஹோசாவிற்கு எதிரான ஒரு கண்டன அறிக்கையை வெளியிட்டு அவரை ஒரு அதிதீவிரவாதி என முத்திரை குத்தியுள்ளார். ஒரு வருட காலத்திற்குள் தான் ஏற்றிப் போற்றிய ஒருவருக்கு எதிராகக் கண்டனம் தெரிவிக்கும் ஒரு பரிதாபகரமான நிலைக்கு சண்முகதாசன் தள்ளப்பட்டுள்ளார். இவ்வாறு அன்வர் ஹோசாவையும் அல்பேனியக்கட்சியையும் கண்டித்த சம்பவத்தை 'அசல் கொள்கைவாதி சண்முகதாசன்'' எனக் கூற முற்படுபவர்களும் ஒரிருவர் இருக்கவே செய்கின்றனர். ஆனால் இப் பரிதாபகமான நிலை சண்முகதாசன் ஒரு தூரதிருஷ்டியுள்ள மாக்சிச லெனினிசவாதி அல்ல என்பதையும், அவரது குறுகிய நிலையியல் கண்ணோட்டத்தில் அமைந்த ரொட்சீசத் தத்துவ நிலைப்பாட்டையுமே தெளிவாக்கியுள்ளது. ஏனெனில் உண்மையான மாக்சிச- லெனினிச வாதிகள் எப்பொழுதும் விஷயங்களை ஆழமாகவும் நிதானமாகவும் சமகாலப் பிரச்சினைகளை ஒரு இயங்கியல் பார்வையில் தூரதிருஷ்டியுடனும் பார்க்க வேண்டும் என்பது அவசியமாகும். மேலெழுந்தவாரியாகவும், நிலையியல் கண்ணோட்டத்திலும் பார்த்தால் சண்முகதாசன் ஒரு வருடத்திற்கு ஏற்படுத்திய முன்னுக்குப் பின் முரணான முடிவுகளையே எதிர்நோக்க வேண்டும்.

கடந்த வருடத்தில் சண்முகதாசனின் எதிர்ப்புரட்சிகர நிலைப்பாட்டிற்கு எதிராக முன் வைத்த எமது அறிக்கையில் அல்பேனியக் கட்சியினதும் அன்வர் ஹோசாவினதும் தவறான நிலைப்பாட்டையும் தத்துவக் கோளாறுகளையும் சரியாகவே சுட்டிக்காட்டியிருந்தோம் இன்று அவை நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. இதில் தற்புகழ்ச்சி அடையவில்லை. மாக்சிசம்- லெனினிசம்- மாசேதுங் சிந்தனையின் சரியான அணுகு முறைக்குக் கிடைத்துள்ள வெற்றி என்றே நாம் கருதுகின்றோம்.

இன்று சண்முகதாசன் வாயளவில் அன்வர் ஹோசாவை நிராகரித்து கண்டித்த போதிலும், தத்துவநிலைப்பாடு முற்றிலும் அன்வர் ஹோசாவிற்கு ஒத்துப் போகக் கூடியதாகவே உள்ளது. ஆனால வாயளவில் தானும் மாசேதுங் சிந்தனை (ஒரு பகுதியை மட்டும்) ஆதரிப்பதற்கு சண்முகதாசன் நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பதால் மட்டுமே அன்வர் ஹோசாவையும் நிராகரிக்க வேண்டியுள்ளது.

ஆனால் ஒரு உண்மை மிகவும் தெளிவாகத் தெரிகின்றது. சர்வதேச ரீதியாகவும், தேசிய ரீதியாகவும் இந்த இரு நபர்களும் சோவியத் சமூக ஏகாதிபத்தியத்திற்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் உதவி வருகிறார்கள் என்பதாகும். இது உலக மாக்சிச லெனினிச சக்திகளின் முன்னிலையிலும், நமது நாட்டு மாக்சிச- லெனினிச வாதிகளின் முன்னால் முற்று முழுதாக அன்வர் ஹோசாவும்- சண்முகதாசனும் அம்பலமாகி இருப்பதையே காணக்கூடியதாகவுள்ளது.

# ஒடுக்கப்பட்டமக்கள்தேர்தலில் பங்குபற்ற வேண்டுமாம்

''தனியார் துறைக்கு இன்றைய அரசு முக்கியத்துவம் அளித்து வருவதால் ஏற்கனவே நாம் பெற்றிருந்த வாய்ப்புக்களை எல்லாம் தனியார் துறை இல்லாமல் செய்து வருகின்றது. வருங்காலத்தில் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் மூலம் ஒடுக்கப்பட்ட சமூகத்தினரும் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கக்கூடிய வாய்ப்பு இருந்து வருகிறது. அத்தகைய சந்தர்ப்பங்களில் சிதறி நின்று வாய்ப்புக்களை இழந்து விடக் கூடாது.''

இவ்வாறு எஸ். ரி. என். நாகரத்தினம் ''வெகுஜன இயக்க மாநாடு'' என்ற பெயரில் நடத்தப்பட்ட உதிரிகளின் கூட்டத்தில் பேசித் தனது உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தியுள்ளார். இவர் ஒரு பிரபல முதலாளி என்பதும், கடந்த காலத்தில் தனது முதலுக்கு என்னென்ன வாய்ப்புகளைப் பெற்றிருந்தார் என்பதும் இன்று அவ் வாய்ப்புக்கள் பறிபோய் இருப்பதைப் பற்றி அவர் அங்கலாய்த்திருப்பது அவரைப் பொறுத்தவரை நியாயமானதேயாகும். எனவே தான் அவர் எல்லா வாய்ப்புக்களையும் எதிர்காலத்தில் கூடியளவு பயன்படுத்தவே தேர்தலில் ஒடுக்கப்பட்ட மக்கள் பங்குபற்ற வேண்டும் என்று கூறி விகிதாசாரப் பிரதிநிதித்துவத்திற்கு வக்காலத்து வாங்கி உள்ளார்.

இதிலிருந்து இந்த நபர்கள் பழைய சாதிச்சங்கங்கள் வைத்து பிழைப்பு நடத்தியவர்கள் சென்ற பாதையில் இறங்கி விட்டுள்ளதை எடுத்துக் காட்டுகின்றதல்லவா?

ஒருவருடைய சொற்களில் இருந்தல்ல, நடைமுறையில் இருந்தே உண்மைகளைக் காணவேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பூச்சியக் கம்யூனிஸ்ட் கட்சியும் கம்பூச்சியப் புரட்சியும்

தோழர் கே. ஏ. சுப்பிரமணியம்

மகத்தான கம்பூச்சிய கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பிக்கப்பட்டு அதன் பத்தொன்பதாவது வருடாந்த தினத்தை 30-9-79ல் கொண்டாடுகிறது. இவ் வைபவத்தின் பொருட்டு உலகப் பாட்டாளி வர்க்கத்துடன் நாமும் இணைந்து வீரம்மிக்க கம்பூச்சியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு எமது இதயபூர்வமான தோழமை மிக்க வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

## புரட்சிப் புயலில் பிறந்த கட்சி

கம்பூச்சிய கம்யூனிஸ்ட் கட்சி புரட்சிகரப் புயலிலே உதயமாகி பரிணமித்த கட்சி, அதன் தோற்றம் கம்பூச்சிய புரட்சியினதும், தொழிலாளி வர்க்கத்தினதும் வரலாற்றில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தியது.

மகத்தான கம்பூச்சிய கம்யூனிஸ்ட் கட்சி தோற்றுவிக்கப்பட்ட காலம், சர்வதேச கம்யூனிச முகாமில் மாக்சிச லெனினிசத்திற்கும்- நவீன திரிபுவாதத்திற்கு மிடையிலேயான கட்சிகளின் மாபெரும் வாதப்பிரதிவாதப் போராட்டம் நடந்த காலமாகும்.

இக் காலகட்டத்தில், அது எந்த ஒரு திரிபுவாத ஆணைக்கோலுக்கும் அடிபணியாது மிகப் பொறுப்புடன் மாக்சிச லெனினிச சர்வவியாபகமான உண்மைகளை கம்பூச்சியாவின் ஸ்தூல நிலைமைகளுக்கேற்ப பிரயோகித்து தேசிய ஜனநாயகப் புரட்சிக்கும் சோஷலிசத்திற்குமான கொள்கைத் திட்டத்தையும், இராணுவ தந்திரோபாயங்களையும் வகுத்தது. அதே ஆண்டில் (1960) தலைமறைவு ஆயுதப்படைகளையும் உருவாக்கியது.

## கம்பூச்சியப் புரட்சியின் இலக்கு

அரசியல் தத்துவார்த்த மார்க்கம்- புரட்சியின் இலக்கு -இவற்றை முன்வைத்து நாட்டினது சகல சக்திகளையும் ஒன்றிணைத்து, ஏகாதிபத்தியத்திற்கு- குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, நாட்டின் விடுதலை, ஆதிபத்தியம், இறைமை இவற்றை வென்றெடுக்கவும், நிலப்பிரபுத்துவத்தை - நிலப்பிரபுக்களை தூக்கி எறியவும் அவர்களுடைய சுரண்டல் அமைப்பை மாற்றவும் திடசங்கற்பம்பூண்டு செயல்பட்டது.

அது, மக்களைச் சார்ந்தும், மக்கள் மத்தியில் மிக ஆழமாகப்போயும் கிராமப் புறங்களில் வேரூன்றியும் 1961-1966 காலகட்டங்களில் நாட்டின் பல பகுதிகளிலும் பல புரட்சிகரத் தளப் பிரதேசங்களைக் கட்டியெழுப்பியது.

கட்சியின் வளர்ச்சி, உள்நாட்டு- வெளிநாட்டுப் பிற்போக்கு சக்திகளுக்குப் பெரும் பீதியைக் கொடுத்தது. இதன் வெளிப்பாடாக 1967 முற்பகுதியில் லொன்நொல் துரோகக் கும்பல் காட்டுமிராண்டித்தனமாக உள்நாட்டு யுத்தத்தைக் கட்டவிழ்த்து விட்டது. கம்பூச்சியாவின் தலைசிறந்த தேசபக்தர்கள்- புரட்சிவாதிகள் பலர் கொன்று குவிக்கப்பட்டனர். கட்சி என்றுமே காணாத படு பயங்கர அடக்குமுறையை எதிர்நோக்கியது.

வீரம்மிக்க கம்பூச்சிய கம்யூனிஸ்ட் கட்சி உரிய நேரத்தில் பதில் அடி கொடுத்தது. 1968 ஜனவரியில், கட்சியின் தலைமையில் தலைமறைவாகச் செயல்பட்டு வந்த ஆயுதப் படைகள் கொரிலாப் பிரிவுகளாக உருப்பெற்று எதிரிகளின் மீது பதில் தாக்குதலைத் தொடுத்து வெற்றி கண்டதுடன், புரட்சிகர இராணுவத்தையும் உருவாக்கியது. இதன் மூலம் கம்பூச்சிய கம்யூனிஸ்ட் கட்சி தனதுபலத்தை மேலும் அதிகரித்துக் கொண்டது.

## கிராமங்களிலிருந்து நகரங்களுக்கு

கம்பூச்சிய கம்யூனிஸ்ட் கட்சி நகரங்களிலும் கிராமங்களிலும் போராட்டங்களை முன் எடுத்தது, அதே வேளை அது கிராமப்புறங்களையே தனது தளப்பிரதேசங்களாகக் கொண்டிருந்தது. அதனுடைய போராட்டங்கள் பகிரங்கமானதும் இரகசியமானதுமாக இரண்டு விதமாக அமைந்திருந்தது- இருந்தாலும் இரண்டாவதிலேயே போராட்டம் தங்கியுள்ளது, அது சட்ட விரோத- சட்ட ரீதியான போராட்டங்களை முன் எடுக்கும் அதே நேரத்தில் அது முன்னையதிலேயே தங்கிநிற்கிறது சிறப்பாக அது "கிராமங்களிலிருந்து நகரங்களைச் சுற்றிவளைத்து ஆயுத பலத்தால் அதிகாரத்தைக் கைப்பற்றுதல்" என்ற தலைவர் மாஓ அவர்களின் கோட்பாட்டை முதன்மை கொடுத்துச் செயல்படுத்தும் கட்சியாகும்.

மக்களைச் சார்ந்த- மக்களின் அபிலாஷைகளை- அவர்களது புரட்சிகர சுலோகங்களை முன்னெடுத்த சிறந்த மாக்சிச- லெனினிசக் கட்சியாக விளங்கியமையினால் தான் அதனால் ஒரு பரந்த ஐக்கிய முன்னணியைக் கட்டி எழுப்பி உலகமே ஆச்சரியப்படும் விதத்தில் குறுகிய கால எல்லைக்குள்ளாக அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களை முறியடித்து அதன் காவல் நாயகளான லொன்நொல் இராணுவக்கும்பலின் ஆட்சி அதிகாரத்தை துடைத்தெறிந்து, மக்களது தேசிய விடுதலை யுத்தத்தை- தாய் நாட்டின் முழுமையான விடுதலையை ஏப்ரல் 1975ல் வென்றெடுக்க முடிந்தது.

## தேசவிடுதலையும் சோஷலிச நிர்மாணமும்

தேச விடுதலையைத் தொடர்ந்து, அது நாட்டின் சோஷலிசப் புரட்சியையும், சோஷலிச நிர்மானத்தையும் சரித்திரத்தின் புதிய கட்டத்தோடு ஆரம்பித்துச் செயல்படுத்த முன் வந்தது.

புரட்சியை ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு ஏற்றுமதி- இறக்குமதி செய்ய முடியாதென்ற சரியான மார்க்சிச- லெனினிசக் கோட்பாட்டில் ஊன்றி நிற்கும் கம்பூச்சிய கம்யூனிஸ்ட் கட்சி, சோசலிசப் புரட்சியையும் சோஷலிச நிர்மாணத்தையும் முன்னெடுக்கும் பொருட்டு, எத்தனை கஸ்டங்கள்- தடைகள் குறுக்கிடினும் அவற்றைத் தகர்த்தெறிந்து, கம்பூச்சியாவின் ஸ்தூல நிலைமைகளுக்கேற்ப சுய ஆதாரத்துடனான சோஷலிச அமைப்பைக் கட்டி அமைக்கும் முயற்சியில் அதற்கான சரியான திட்டங்களை முன் வைத்தது.

நாடு திரண்ட மக்களின் பேராதரவு கட்சிக்குக் கிடைத்தது. புரட்சியின் பயனை, கட்சியினது தொழிலாளர்- விவசாயிகள் அரசு அதிகாரத்தை, இளம் ஜனநாயக கம்பூச்சியாவை பாதுகாக்கவும், சோஷலிசப் புரட்சியையும் சோஷலிச நிர்மாணத்தையும் முன்னெடுக்கவும் இரட்டிப்பான வல்லமையுடன் நாடு ஒன்றுபட்டது.

கம்பூச்சியப் புரட்சியாளர்கள், பழைய உலகத்தை அழிப்பதில் மட்டுமல்ல புதிய ஆக்கத்திலும் வல்லவர்கள் என்பதை உலக மக்களுக்கு மிகக் குறுகிய காலத்தில் கம்பூச்சிய கம்யூனிஸ்ட் கட்சி எடுத்துக் காட்டியது.

பழைய சமுதாய அமைப்பு விட்டுச் சென்ற சுரண்டல், ஆண்டான் அடிமை முறை, பசி, பட்டினி, வறுமை, அறியாமை, நோய் இவற்றிற்கெதிரான மாபெரும் போராட்டத்தை கட்சி முன்னெடுத்தது.

சுகாதாரம், நீர்ப்பாசனம், விவசாயம், விவசாயக் கூட்டுறவுப்பண்ணைகள், சிறுகைத் தொழில்கள், கல்வி, கலாச்சாரம் இவற்றில் மிக வேகமாக முன்னேற்றத்தைக் கொண்டு வந்தது.

முன்னர் நாணலும் புல்லும் வளர்ந்து புதர்க்காடாயிருந்த இடங்களில் ஆயிரக்கணக்கான ஹெக்டர்களில் நெற்பயிர்கள் காற்றில் அசைந்தன. உணவுத் தேவையில் தன்நிறைவைக்கண்டதுமல்லாமல் பத்தாயிரக்கணக்கான தொன் அரிசியை வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து வந்தது.

கம்பூச்சியாவின் ஆறுகள், கடல் போதியளவு வளமிக்கவை. அடர்ந்த காடுகளும் நிலமும் இயற்கை வளம் கொண்டவை. ஜனநாயக கம்பூச்சியா இவற்றை மக்களுக்குப் பயன்படுத்த முன்வந்ததுடன், தேசிய விடுதலையைத் தொடர்ந்து எண்பது லட்சம் சனத்தொகையை மட்டும் கொண்டிருந்த ஜனநாயக கம்பூச்சியா நாட்டின் வளங்களைப் பயன்படுத்தி அதன் சனத்தொகையை மேலும் ஒன்றரை மடங்காக அதிகரிக்க வேண்டுமென்று பெருமையுடன் அறைகூவல் விடுத்தது.

இவ்விதம் அதற்கான திட்டங்களை வகுத்துச் செயல்பட்ட ஜனநாயக கம்பூச்சியாவும் அதன் மகத்தான கம்யூனிஸ்ட் கட்சியும் உலகின் கிழக்கே சிறப்பான புதிய ஒரு தோற்றத்தைக் காட்டியபோது வோரிஸ்நான் திட்டமிட்ட மாபெரும் சதி நடந்தேறியது. ஆம் திட்டமிட்ட மாபெரும் சதியே அது.

## சமூகஏகாதிபத்தியச்சதி

கம்பூச்சிய தேசிய- விடுதலைப் போராட்ட காலத்தின் போதும், ஜனநாயக கம்பூச்சியா உருவான பின்னரும் அதனை அங்கீகரிக்காத சோவியத் யூனியன், உலக மேலாதிக்க அவா காரணமாக கம்பூச்சிய அரசைக் கவிழ்க்கும் மாபெரும் சதியில் இறங்கியது இதற்கு, இந்தோ சீன நாடுகளின் மீது பிராந்திய மேலாதிக்கம் செலுத்தும் நோக்குடனும் -அதற்கான இந்தோ-சீன சம்மேளனம் ஒன்றை உருவாக்கும் பேராசையுடனும் அங்கலாயித்து கொண்டிருந்த வியட்னாம் துணை போயிற்று.

சோவியத் சமூக ஏகாதிபத்தியமானது உலகமேலாதிக்கத்தை மேலும் பெறும் பொருட்டு உலகின் இராணுவ கேந்திர முக்கியத்துவமுள்ள இடங்களில் படைகளை நிறுத்தியும், பல்வேறு நாடுகளுடன் பல தாப்பட்ட இராணுவ ஒப்பந்தங்களை செய்தும் கேந்திர முக்கியத்துவமுள்ள நாடுகளை ஒவ்வொன்றாக தனது காலில் போட்டு, அங்கே தனது பொம்மை ஆட்சிகளை ஏற்படுத்தியும் வருகிறது. சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புக் கெடுபிடிகளுக்குக் கியூபாவும் வியட்னாமும் கூலிப் படைகளாய் சேவகம் செய்கின்றன.

வியட்னாம் துருப்புக்களின் ஆக்கிரமிப்புக்கு இலக்கான ஜனநாயக கம்பூச்சிய அரசின் ஜீவநாடி தொடர்ந்தும் கிராமப் புறங்களில் உயிர்த்துடிப்புடன் இயங்குகிறது. முழு நாட்டையும் விடுவிக்கும் தேசிய விடுதலை போராட்டத்தை கம்பூச்சிய மக்கள் முன்னெடுத்து செல்கிறார்கள். நொம்பென் பொம்மை அரசு நகரத்தில் தனிமைப்படுத்தப்பட்டு- மக்களிலிருந்து பிரிந்து ஜீவனற்றிருக்கிறது.

பலவகைப்பட்ட போராட்டங்களுக்கும் முகங் கொடுத்து போராட்ட சுவாலையில் புடம் போட்டெடுக்கப்பட்ட கம்பூச்சிய கம்யூனிஸ்ட் கட்சி நீருடன் மீனுக்குள்ள உறவு போல் வெகுஜனங்களுடன் ஒன்றித்து- தொடர்ந்தும் ஆக்கிரமிப்புக்கெதிராக விட்டுக் கொடுக்காத போராட்டத்தை நடாத்தும் மக்களுக்கு நாட்டிலும் நாட்டிற்கு வெளியிலுமாக விசாலமான ஐக்கிய முன்னணி ஒன்றின் மூலம் தலைமை தாங்கி வருகிறது நாடு பரந்த இப்போராட்ட சுவாலையில் சோவியத் சமூக ஏகாதிபத்தியம் தன் மேலாதிக்கபேராசை வெந்து கருகுவதை காணும் அதே வேளை சர்வதேசப் பாட்டாளி வர்க்கம் மனிதகுலத்தின் ஒளிமயமான எதிர்காலத்தை பார்க்கிறது.

பேராசைமிக்க சோவியத் திரிபுவாதக் கும்பலுக்கு கம்பூச்சிய கம்யூனிஸ்ட் கட்சியிடமிருந்து கிடைக்கும் முதலடி அல்ல இது. கம்பூச்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் ஆரம்பமே குருஷேவினதும் அவனது சகபாடிகளினதும் திரிபுவாத மார்க்கத்தை எதிர்த்துப் போராடிய வரலாற்றுப் புகழ் தான். அன்று, கம்பூச்சிய கம்யூனிஸ்ட்டுக்கள் சோவியத் திரிபுவாதிகளின் தவறான தத்துவார்த்த கருத்துக்களை முனைத்ததன் மூலமும் சரியான நடைமுறை ரீதியில் இயங்கியதன் மூலமும் முறியடித்தார்கள். இன்று சோவியத் சமூக ஏகாதிபத்தியமும் அதன்ஏவல் நாய்களான லீடுவான் காஸ்ட்ரோ கும்பலும் உலக மக்களுக்கெதிராக தொடுக்கும் ஆயுத தாக்குதலுக்கும் இராணுவ ஆக்கிரமிப்புக்கும் எதிராக அடிபணியாது எதிர் தாக்குதல் மூலம் பதிலடிகொடுத்து தேசிய விடுதலைப் போராட்டத்தை முன் எடுக்கிறார்கள்.

கம்பூச்சிய கம்யூனிஸ்ட் கட்சி சர்வதேச விவகாரங்களில் பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கோட்பாட்டைக் கடைப்பிடிக்கிறது. நேர்மையான மாக்சிச- லெனினிச கட்சிகளுடனும் அடக்கி ஒடுக்கப்பட்ட தேசங்களுடனும், உலக நாடுகளின் மக்களுடனும் இணைந்து போராடுகிறது. ஏகாதிபத்தியம். காலனித்துவம் நவகாலனித்துவம் மேலாதிக்கம் ஆகியவற்றிற்கெதிராக போராடுவதன் மூலம் சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்திற்கு செழிப்பான பங்கை ஆற்றி வருகின்றது.

## வெடிகுண்டுகளால் விடுதலையை நசுக்க முடியாது!

சோவியத் வெடிகுண்டுகளாலும் துப்பாக்கி ரவைகளாலும் புரட்சி வாதிகளை அழித்து விட முடியாது. எத்தனை கஸ்டமான சூழ்நிலைகளிலும் என்னதான் தோல்விகள் ஏற்படினும் கம்யூனிஸ்ட்டுக்கள் மனந்தளராது- வெகுஜனங்களில் தங்கி நின்று மக்கள் யுத்தத் தந்திரோபாயங்களின் மூலம் தேசிய விடுதலைப் புரட்சிகர பதாகையை உயர்த்திப் பிடிப்பர் என்ற உண்மையை கம்பூச்சிய கம்யூனிஸ்ட் கட்சி நிரூபித்துக் காட்டி வருகிறது.

உலகம் பூராவிலும் உள்ள பாட்டாளி வர்க்கத்தினதும், வெகுஜனங்களினதும் ஆதரவு ஆக்கிரமிப்புக்குள்ளாகியிருக்கும் நாடுகளுக்கும் மக்களுக்கும் மேயன்றி சோவியத் சமூக ஏகாதிபத்தியத்திற்கும் அதன் ஏவல்நாய்களுக்குமல்ல. இறுதியில் வெற்றி மக்களுக்குத் தான், சோவியத் சமூக ஏகாதிபத்தியம் தோல்வியடைவது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

சோவியத்திடமிருந்து எந்தவிதமான உதவியையும் பெற்றுக் கொள்ளாமல் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை- அதன் ஆக்கிரமிப்பை முறியடித்து விடுதலை பெற்ற நாடான கம்பூச்சியா முன்னுதாரணமிக்கது.

எந்த ஒரு சிறிய- பலவீனமான நாடாயினும் சரி, அந்நாட்டின் ஸ்தூலமான நிலைமைகளுக்கு ஏற்ப மாக்சிசம்- லெனினிசம்- மாசேதுங் சிந்தனைப் பதாகையை உயர்த்திப் ஒரு பாட்டாளி வர்க்கக் கட்சியின் தலைமையின் கீழ் தெளிவான மார்க்கத்தை வகுத்து. மக்களில் நம்பிக்கை வைத்து மக்களைச் சார்ந்து நின்று ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தால் "பலம் மிக்க" மேலாதிக்க வல்லரசு ஒன்றின் ஆக்கிரமிப்பை முறியடித்து நாட்டின் விடுதலையை வெற்றி கொள்ள முடியும். பாட்டாளி வர்க்க அரசை கவிழ்க்க, தேசத்தை ஆக்கிரமிக்க முற்படுபவர்களை மக்கள் யுத்தத்தின் மூலம் துடைத்தெறிய முடியும்- தேசிய புனர் நிர்மானத்தில் வெற்றி கொள்ள முடியும். இவையே கம்பூச்சிய மக்களின் புரட்சிகரப் போராட்டம் எமக்குத் தரும் பாடங்களாகும்.

**சிறியநாட்டு மக்களால் பெரிய நாடொன்றின் ஆக்கிரமிப்பை நிச்சயம்தோற்கடிக்கமுடியும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் ஒருபோதும் மேலாதிக்கம்கொள்ளமாட்டோம்

## பீலிக்ஸ் கிறீனுக்கு தோழர் குவா அவர்களின் தொலைக்காட்சிப் பேட்டி

**கேள்வி:** புரட்சிகர இயக்கத்தில் நீங்கள் சேர்ந்து கொண்டபோது உங்கள் வயது எத்தனை? யப்பானியருக்கு எதிரான யுத்தத்தில் எப்போது பங்கு கொண்டீர்கள்?

**பதில்:** எனக்குப் பதினேழு வயதாயிருந்த போது 1938-ல் புரட்சியில் சேர்ந்துகொண்டேன். அதே ஆண்டில் சீனக்கம்யூனிஸ்ட் கட்சியிலும் சேர்ந்து கொண்டேன். கோமிந்தாங் படை, யப்பானிய ஆக்கிரமிப்பாளர் முன்னேறி வருவதற்கு முன்னரே பின்வாங்கிவிட்டது. கம்யூனிஸ்ட் தலைமையிலான எட்டாவது மார்க்கப்படை எதிரி அணிகளுக்குப் பின்னால் கொரில்லா யுத்தத்தில் ஈடுபடுவதற்கும் எதிர்ப்புத் தளங்களை நிறுவுவதற்காக ஊடுருவிக்கொண்டது. எனது கவுண்டியின் மலைப்பிரதேசம் எதிரிகளின் பலம் மிக்க முனைகளால் சூழப்பட்ட எதிர்ப்புக் கொரில்லாத் தளத்தில் ஒன்றாக விளங்கியது. வருடத்தில் பலதடவைகள் யப்பானியர் முற்றுகையிடும் முறைகளைக் கையாண்டபோது கோரமான சண்டைகள் இடம்பெற்றன. அச்சமயம் அவர்கள் சகலதையும் தீயிடல், சகலதையும் கொல்லுதல், சகலதையும் கொள்ளையிடல் என்ற கொள்கையைக் கடைப்பிடித்தனர். மக்கள்மீது நம்பிக்கை வைத்து இறுதி வெற்றிவரை நாம் போராட்டத்தில் ஊன்றி நின்றோம். எனது சொந்த கவுண்டியின் யப்பானிய விரோத லீக்கின் தலைவராகவும், கவுண்டிக் கட்சிக்குழுவின் ஆயுதப்படைகள் குழுவின் தலைவராகவும் கவுண்டியின் கட்சிக் காரியதரிசியாகவும் கடமையாற்றி வந்தேன், யப்பானியருக்கு எதிரான சமர்களில் தரைகளிலும், மலைகளிலும் முன்வரிசையில் நான் முக்கிய பங்குகொண்டேன்.

**கேள்வி:** யுத்தத்தின் பின்பு நீங்கள் ஹூனான் மாகாணத்திற்குச் சென்றீர்கள், அங்கு பிரமாண்டமான நீர்ப்பாசன ஜலமின்சாரத் திட்டத்தை திட்டமிட்டு நிர்மாணிக்கும் வேலைக்கு பொறுப்பாய் இருந்தீர்கள், அதைப்பற்றிக் கொஞ்சம் சொல்லுவீர்களா?

**பதில்:** நான் ஹூனான் மாகாணத்திற்குச்சென்ற சமயம் விடுதலை யுத்தம் முடிவடையவில்லை. 1949 வசந்த காலத்தில் மக்கள் விடுதலைச் சேனையுடன் தெற்கு நோக்கிச் சென்றேன். யூலை மாதத்தில் ஹூனானைச் சென்றடைந்தோம், மாகாணத் தலைநகரான சங்ஷா ஆகஸ்டில் அமைதியான முறையில் விடுதலை செய்யப்பட்டது. நான் ஹூனானில் 23 வருடங்கள் வேலை செய்தேன். நான் மாகாணக் கட்சிக்குழுவில் வேலைசெய்து கொண்டிருந்த சமயம் 1965 இல் ஷாஓஷான நீர்ப்பாசனத் திட்டத்திற்குப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டேன். அந்தத் திட்டத்தில் வேலை செய்வதற்கு ஒரு இலட்சம் மக்களை அணிதிரட்டினோம். அதன் பிரதான கால்வாயையும், வடக்குக் கால்வாயையும் பத்து மாதங்களில் பூர்த்தியாக்கப்பட்டது. இந்தத் திட்டம் 1966 யூன் 1 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது. 60,000 ஹெக்டேயர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்கும் பிரதான வேலையுடன் இத்திட்டம் சிறிது மின்சாரத்தையும் வழங்கும். அத்துடன் வெள்ள நீரைத் தடுப்பதுடன் மீன்வளர்ப்புக்கும் உதவும். கடந்த ஒரு டசின் ஆண்டுகளில் இந்தத்திட்டம் நன்றாகச் செயற்பட்டு வந்துள்ளது.

**கேள்வி:** 1971 இல் நீங்கள் பீக்கிங்கிற்கு அழைக்கப்பட்டீர்கள் என நினைக்கிறேன். இதற்கும் லின்பியோ விவகாரத்திற்கும் மாசேதுங் அவர்களைக் கவிழ்க்கும் அவனது முயற்சிக்கும் ஏதாவது தொடர்பு உண்டா?

**பதில்:** 1971 பெப்ரவரியில் ராஜ்ய சபையின் கீழ் வேலை செய்வதற்கு மாற்றப்பட்டு விவசாயம், நிதி, வர்த்தக விவகாரங்களுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டேன், நான் அங்கு சென்ற சொற்ப காலத்தில் பிரதமர் சௌ என்லை தென்சீன மாகாணங்களுக்கு ஆய்வுச் சுற்றுப் பயணத்தில் அனுப்பி நாடு பூராவும் உள்ள நிலைமையில் எனக்கு பரிச்சயம் ஏற்படுத்தப்பட்டது. எனவே எனது மாற்றத்திற்கும் லின்பியோவினது சதிமுயற்சிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை.

**கேள்வி:** ''நவீனமயம்'' சீனாவை ஒருவகையில் ''மேற்கத்தியப்பாணி'' யாக்கி அதனோடு கூடிய பிரச்சினைகளையும் கொண்டுவராதா? உதாரணத்திற்கு இயந்திரங்கள் தொழிலாளர்களின் இடத்தைப் பிடித்ததும் இது வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகரிக்கமாட்டாதா?

**பதில்:** சீனாவின் நவீனமயத் திட்டம் இரண்டு வரையறையில் தங்கியுள்ளதென்பதை நீங்கள் அவதானித்திருப்பீர்கள் என நினைக்கிறேன். முதலாவது ஒரு சோஷலிச அமைப்பின் அடித்தளத்தின்மேல் நவீனமயத்தை அடைதல், இரண்டாவது சீனாவின் நிலைமைக்கேற்ப சீனப்பாணியில் அதை மேற்கொள்வது.

சோஷலிசமும் நவீனமயமும் நெருக்கமாகப் பிணைந்துள்ளது. அது எவ்வகையிலும் முரண்பட்டதல்ல. அது தவிர்க்க முடியாமலே மேற்கத்தைய பாணி 'யாக்கும் அல்லது முதலாளித்துவத்திற்கு இட்டுச் செல்லும் என நினைப்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. நாம் வெளிநாட்டு முதலீடுகளை ஏற்றுக்கொள்வதும் ஏனைய நாடுகளுடன் அதிகரித்துவரும் பொருளாதார கலாச்சாரப் பரிவர்த்தனைகள் ஓரளவு மேற்கத்தியச் செல்வாக்கை பரவச் செய்யக்கூடும்தான். இதுபற்றி அவதானிப்புடன் இருக்கவேண்டியதுதான். எமது மக்களுக்கு நல்லது எது கூடாதது எது என்பதைச் சொல்லவும் கெட்ட செல்வாக்குகளை எதிர்த்து வெற்றிபெற முடியும் எனவும் நாம் நம்புகின்றோம்.

பெரிய ஜனத்தொகையுடன் கூடிய நாடு என்பதால் வேலையின்மை ஒரு முக்கிய பிரச்சினைதான், சீனாவின் சனத்தொகை பெரியது என்ற உண்மை நிலையிலிருந்தே நவீன மயத்திட்டத்தை சீன முறையிலிருந்து ஆரம்பித்து செயற்படத் தீர்மானித்தோம். நாம் நவீன பெரிய அளவிலான நிறுவனங்களை கட்டியமைப்போம். அதேசமயம் சிறிய நடுத்தர அளவிலான நிறுவனங்களையும் கட்டுவோம். கைப்பணி உற்பத்தி நீண்டகாலத்திற்கு தன்னியக்க இயந்திரமயத்துடன் சகஜீவனம் செய்யும், பொருளாதார ரீதியாகச்

> பிரபல பிருட்டிஷ் எழுத்தாளரும், ஆங்கிலோ - சீன விளக்கத்திற்கான சங்கத்தின் உபதலைவருமான திரு. பீலிக்ஸ் கிறீன் அவர்கள் கடந்த செப்டம்பர் 11-ல் பீக்கிங்கில் சீனப்பிரதமர் தோழர் குவாஹோபெங் அவர்களுடன் ஒரு தொலைக்காட்சிப் பேட்டியை நடத்தினர். இப்பேட்டியின் போது பிரதமர் குவா அவர்கள், பீலிக்ஸ்கிறீன் அவர்களின் பல்வேறு கேள்விகளுக்கு விளக்கமான பதில் அளித்தார். அப்பேட்டியின் சில முக்கிய பகுதியை கீழே தருகின்றோம்.
>
> [ஆ. குழு]

சீனா தற்போதும் கணிசமாகப் பின்தங்கியுள்ளது. ஒவ்வொரு துறையிலும் புதிய வேலைகளை ஆரம்பிக்க வேண்டிய தேவையுள்ளது. வரையறையில்லாத சாத்தியக்கூறுகள உள்ளன. அண்மையில் வேலைவாய்ப்புக்களை விஸ்தரிப்பதற்காக நகர்ப்புற கைப்பணி சில்லறைக் கடைகள் சேவைக் கைத்தொழில் என்பனவற்றை வளர்க்க ஆரம்பித்துள்ளோம். இந்த வழிமூலம் வேலைக்காகக் காத்திருப்போருக்கு படிப்படியாக வேலை தேடிக் கொடுப்போம். சீனா ஒரு சோஷலிச நாடு. வேலையில்லாப் பிரச்சினைக்குத் தகுந்த முறையில் தீர்வுகாண அதற்கு முற்றுமுழுதும் சாத்தியமே.

**கேள்வி:** நால்வர் குழுவிற்கு என்ன நடக்கிறது எனப் பலர் வினவுகிறார்கள். அதைப்பற்றி ஏதாவது உங்களால் சொல்ல முடியுமா?

**பதில்:** அவர்கள் உயிருடன் இருக்கிறார்கள் என்பதை நான் உங்களுக்கு உத்தரவாதமாகத் தெரிவிக்கிறேன். ஆனால் தடுப்புக்காவலில் உள்ளனர். ஏனையோரைப் போலவே அவர்கள் உண்கிறார்கள் - உறங்குகின்றார்கள். எண்ணில்லா பொறுப்புதாரி ஊழியர்களை அவர்கள் சித்திரவதை செய்ததுபோல நாம் அவர்களைத் துன்புறுத்தமாட்டோம். சீனமக்களுக்கு எதிராக இழைத்த பாரிய குற்றங்களுக்கு அவர்கள் பதிலளிக்கத்தான் வேண்டும்.

**கேள்வி:** இந்த நால்வருக்கும் எதிராக விசாரணை நடக்குமென்பது இதன் பொருளா?

**பதில்:** ஆம். சட்ட ஒழுங்குகளுக்கு அமைய அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

**கேள்வி:** கலாச்சாரப் புரட்சியை பின்நோக்கிப் பார்க்கும்போது அந்தப் புரட்சியின் நேர்-எதிர் பலாபலன்களைப் பற்றி உங்களது தற்போதைய மதிப்பீடு என்ன?

**பதில்:** திரிபுவாதத்தை எதிர்ப்பதும் தடுப்பதுமே கலாச்சாரப் புரட்சியின் மூலநோக்கமாகவிருந்தது - சீனாவில் சோஷலிசம் இறுக்கமாக வளர்ப்பதற்கு அது முயன்றது. ஆனால் அந்தச்சமயம் சீனாவிலிருந்த அரசியல் நிலைமை பற்றி ஒரு தவறான மதிப்பீடு இருந்தது. கட்சிக்குள் இருந்த பிரச்சினைகளின் அவசரத்தன்மை பற்றி அதிக அழுத்தம் கொடுக்கப்பட்டது. குறிப்பாக லின்பியாவோவும் நால்வர் குழுவும் இயக்கத்தை வளுந்தரத்திற்கு இட்டுச் சென்றனர். இதன் விளைவாக எமது சோஷலிச இலட்சியம் சீனமக்கள் குடியரசு ஸ்தாபிக்கப்பட்ட பின் மிகப் பாரதூரமான பின்னடைவைப் பெற்றது.

கலாச்சாரப் புரட்சி சீனாவில் கணிசமான விளைவுகளை ஏற்படுத்தியது. அதன் தாக்கம் வெளியிலும் உணரக்கூடியதாயுள்ளது. எனவே நாம் உணர்வுபூர்வமாக அனுபவத்தைத் தொகுக்கவேண்டும். ஆனால் சிலவற்றை மேலும் ஆராயவேண்டியுள்ளது. இதன்காரணத்தாலேயே கட்சியின் பதினோராவது மத்திய குழு அதன் மூன்றாவது விரிவுபடுத்தப்பட்ட அமர்வில் கலாசாரப் புரட்சியைப்பற்றி சகலதையும் உள்ளடக்கிய தொகுப்பை அவசரத்துடன் செய்வது புத்திசாலித்தனமல்லவெனவும் காலம் செல்லச் செல்ல விடயங்களை மேலும் சரியானமுறையில் பார்க்க முடியுமெனக் கருதியது.

**கேள்வி:** சர்வதேச விவகாரங்களில் உலகின் பலச்சமநிலை துரிதமாக மாற்றமடைகின்றது. விசேசமாக சோவியத் யூனியனின் இராணுவப் பலம் அதிகரித்து வருகின்றது. இது தொடர்பாகச் சீனா என்ன செய்கிறது. - ஐரோப்பிய நாடுகள் எவ்வாறு செயற்பட வேண்டுமென நீங்கள் நினைக்கிறீர்கள்?

**பதில்:** இன்றைய உலகம் கொந்தளிப்பாகவும் அமைதியற்றும் இருப்பதை ஒவ்வொருவரும் காண முடியும். உலக மேலாதிக்கத்திற்காக இரு பெரும் வல்லரசுகளும் போட்டா போட்டியைத் தீவிரப்படுத்தியுள்ளதாலேயே உலக சமாதானமும் ஸ்திரமும் அச்சுறுத்தலுக்குள்ளாக்கியுள்ளதுடன் சமூக ஏகாதிபத்தியம் அதிக துணிவுடன் செயற்படக்கூடிய போக்கைக் கொண்டுள்ளது. இந்தத் தன்மையை ஐரோப்பா, மத்தியகிழக்கு, ஆபிரிக்கா, செங்கடல்-குடாப்பகுதி, தெற்காசியா, இந்தோசீனா எங்கும் அவதானிக்க முடிகிறது. இது எதிர்க்கப்படாவிட்டால், அதன் விஸ்தரிப்பு ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தாவிட்டால் யுத்தத்தை உருவாக்கும் காரணிகள் அதிகரிக்கும். உலகசமாதானம் பந்தோபஸ்துக்கு ஆபத்து அதிகரிக்கும். இந்தப் போட்டா போட்டியின் குவிமையந்தான் ஐரோப்பா. எவ்வாறுயினும் இராணுவ பலச் சமநிலை இயற்கையாகவே மேற்கு ஐரோப்பாவிற்கு எதிராக உள்ளது. மேற்கு ஐரோப்பிய நாடுகள் அவற்றின் ஐக்கியத்திற்கும் பலத்திற்குமாக எடுக்கும் முயற்சிகளை நாம் எப்போதும் ஆதரித்துவந்துள்ளோம். ஒரு பலமான ஐக்கியப்படுத்தப்பட்ட ஐரோப்பா மேலாதிக்கத்திற்கு இடைஞ்சலாகவும், உலக சமாதானத்திற்கான இலட்சியத்திற்கானதும் என நாம் நினைக்கிறோம்.

உலக சமாதானத்தை நிலைநிறுத்த வேண்டுமானால் மேலாதிக்கத்தை எதிர்க்கவேண்டியது தவிர்க்க முடியாது. இவை இரண்டிற்குமிடையே நெருக்கமான பிரிக்கமுடியாத உறவுமுறையுண்டு, தலைவர் மாவோவின் மூன்று உலகக் கோட்பாட்டை இறுக்கமாகப் பின்பற்றி ஏனைய மூன்றும் உலக நாடுகளுடனான ஐக்கியத்தை நாம் பலப்படுத்துவோம். மேலாதிக்கத்தை எதிர்க்கக் கூடிய ஐக்கியப்படக்கூடிய சகல சக்திகளுடன் ஐக்கியப்படுவோம். இதன்மூலம் ஒரு உலக யுத்தம் வெடிப்பதை தாமதிப்போம். அத்துடன் உலக சமாதானத்தை பாதுகாப்போம். சீனாவில் உள்ள நாம் இரண்டு விடயங்களில் ஊன்றி நிற்போம். நாம் ஒருபோதும் மேலாதிக்கம் கொள்ளமாட்டோம். இரண்டாவது நாம் அதைத் தீர்க்கமாக எதிர்ப்போம். எமது நாடு நவீனமயமாக்கப்பட்ட பின்பும் இதுவே எமது நிலையாய் இருக்கும். நவீனமய வேலைக்கு நீடித்த சமாதானச் சர்வதேச சூழ்நிலை எமக்குத் தேவைப்படுகிறது. சமாதான சகஜீவனம் என்ற பஞ்சசீலக் கொள்கையின் அடிப்படையில் எல்லா நாடுகளுடன் சினேக உறவை வளர்ப்பதற்கு எப்போதும் தீவிரமாக முயற்சி செய்வோம். ஏனைய நாடுகளுடன் சமத்துவம் பாஸ்பர நன்மை என்ற அடிப்படையில் வர்த்தகம் பொருளாதார ஒத்துழைப்பு, விஞ்ஞான, தொழில்நுட்ப கலாச்சார பரிவர்த்தனைகளைச் செய்வோம்.

## சீனாவின் நவீனமயம் சோஷலிச அடித்தளத்திலேயே கட்டப்படுகின்றது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியத் தேர்தலில் சோவியத் தலையீடு

இந்தியாவில் இடைக்காலப் பாராளுமன்றத் தேர்தல்கள் நடைபெறுவதற்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டு வரும் வேளையில் மேலாதிக்க வல்லரசுகளின் சூழ்ச்சிகளும் ஊடுருவல்களும் அசுரவேகத்தில் அதிகரித்து வருவதாக விஷயமறிந்த ஐரோப்பிய பத்திரிகை நிருபர்கள் அறிவிக்கிறார்கள். இலங்கையிலும் இந்தியாவிலும் ஏறத்தாழ ஒரே காலத்தில் அமெரிக்க சார்பான அரசாங்கங்கள் பதவிக்கு வந்தன. மொராஜிதேசாய் பரிசுத்தமான அமெரிக்கதாசன் என்பதை யாவரும் அறிவர், காந்தி நாமத்தை உச்சரித்துக் கொண்டு கட்டுப்பாடு எதுவுமற்ற தனியார்துறை வர்த்தகத்தையும் ஏகாதிபத்திய செல்வாக்கையும் அனுமதிப்பவர் மொராஜி. வல்லரசுப் போட்டியில் தற்காலிகமாக சோவியத் சார்பான சக்திகளின் கை ஓங்கியிருப்பதாகவே கூறப்படுகிறது. ஜனதா ஆட்சியின் வீழ்ச்சியையும், கட்சியின் பிளவையும் தொடர்ந்து பகிரங்கமாகவே நடைபெறும் 'சேறு வீசும்' போராட்டத்தின் பயனாகப் பல சுவையான சங்கதிகள் அம்பலமாகியுள்ளன, அவற்றில் ஒன்று காபந்து அரசாங்கத்தின் நிதிமந்திரியாயிருக்கும் பகுகுண, சோவியத் உளவறியும் நிறுவனமான கே ஜி. பி. யின் கையாட்களில் ஒருவர் என்று ஜகஜீவன்ராம் கூறியிருப்பதாகும். இன்றைய காபந்து பிரதமர் சரண்சிங் முன்னர் அவ்வாறு குறிப்பிட்டிருந்ததாக ஜகஜீவன்ராம் அம்பலப்படுத்தியிருக்கிறார். இதில் ஒன்றும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அமெரிக்க சி ஐ ஏ. நிறுவனம் செய்வதையெல்லாம் போட்டி போட்டுக் கொண்டு ரஷ்ய கே. ஜி, பி. நிறுவனம் இப்பொழுது உலக ரீதியாகச் செய்து வருகிறது. சில வாரங்களுக்கு முன் நாம் இப் பகுதியில் குறிப்பிட்டிருந்தது போல, இன்று, இந்தியாவில் அமெரிக்க ஊடுருவலைவிட ரஷ்ய ஊடுருவல் பலமடங்கு ஆழமானதாகும். பிரிந்து சென்றுள்ள ஜனதாக் கட்சி (லோக்தள்) செயலாளர்களில் ஒருவரான மதுலிமயே, நிதிமந்திரி பகுகுண, 'அவசர புத்தி' ராஜ்நாராயன் முதலியோரெல்லாம் இஸ்கஸ் எனப்படும் இந்தோ சோவியத் கலாசார மன்றத்தின் முக்கியஸ்தர்கள். சென்ற பொதுத் தேர்தலில் இம் மன்றத்தின் மூலமாகவும் பெருந்தொகைப் பணம் வாரியிறைக்கப்பட்டது. ஐரோப்பிய பத்திரிகை நிருபர்களின் கூற்றுப்படி. மத்திய கிழக்கு (லெபனன்), மேற்கு ஐரோப்பா (பிரான்சு) ஆகிய பிராந்தியங்களிலிருந்து அநுபவம் வாய்ந்த சோவியத் ராஜதந்திரிகள் அண்மையில் இந்தியாவிற்கு இடமாற்றம் செய்யப்பட்டிருக்கின்றனர். நடைபெற இருக்கும் தேர்தலில் தமது பங்கைச் செலுத்தவே இவர்கள் புதுடில்லி போய்ச்சேர்ந்திருக்கின்றனர் என்பது கூறாமலே விளங்கும். நாற்றமெடுக்கும் பாராளுமன்ற ஜனநாயகத்தின் போலித்தனங்கள் அத்தனையும் புலப்படும் இந்திய அரசியலில் சோவியத் யூனியன் முழுமூச்சாக இறங்கியுள்ளது: எரிகிற வீட்டில் பிடுங்கினது லாபம் என்பதற்கு இணங்க எப்படியும் தனது செல்வாக்கிற்கு உட்படக் கூடிய அரசாங்கத்தை ஏற்படுத்துவதே சோவியத் நோக்கமாகும். அதற்கு ஒத்தாசை புரிவதற்கு ஏற்ற வகையில் இந்திய திரிபுவாத கம்யூனிஸ்ட் கட்சிகள் இப்பொழுது இயங்கத் தொடங்கியிருக்கின்றன. தேர்தல் முடிவுகள் அயல்நாடுகளையும் பாதிக்கும் என்றே அரசியல் அவதானிகள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

★ ★

## உலக அரங்கில் — அங்கும் இங்கும் ★ உதயன்

### நீதியான லட்சியத்திற்கு ஒரு வெற்றி!

ஐக்கிய நாடுகள் சபையின் முப்பத்தி நான்காவது பொதுக் கூட்டத் தொடர் தற்சமயம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஹவானாவில் இடம்பெற்ற அணிசேரா இயக்க உச்சி மாநாட்டுக்குப் பின்பு நடைபெறும் ஐ. நா. பொதுக் கூட்டம் என்ற முறையில், இப்போதைய கூட்டத் தொடரில் மூன்றாவது உலக நாடுகள் அதிக ஆர்வம் காட்டுவது எதிர்பார்க்கக் கூடியதே. மத்திய கிழக்குப் பிரச்சினை, தென் ஆபிரிக்கப் பிரச்சினை முதலியவற்றோடு கம்பூச்சிய விவகாரம் சபையின் முக்கிய கவனத்தை ஈர்த்திருப்பதும் எதிர்பார்க்கக் கூடியதே. நாம் அடிக்கடி இப் பகுதியில் சுட்டிக்காட்டியிருப்பதைப்போல, கம்பூச்சியாவில் வியட்நாமிய படைபலத்தாலும், சோவியத் இராணுவ- பொருளாதார உதவியாலும் நிலைநாட்டப்பட்டுள்ள கும்பலை உலக மன்றத்தில் ஏற்பிக்க எடுத்த முயற்சிகள் யாவும் முழுத் தோல்வி கண்டன. பெரும்பான்மை வாக்குகளால் சட்டபூர்வமான கம்பூச்சிய ஜனநாயகக் குடியரசின் பிரதிநிதிகள் இப்பொழுது ஐ. நா. சபையில் தமக்குரிய ஆசனங்களில் அமர்ந்துள்ளனர். இது மூன்றாவது மண்டல நாடுகளுக்குக் கிடைத்த மகத்தான வெற்றியாகும். அணிசேரா இயக்கத்தை சோவியத் சமூக ஏகாதிபத்தியப் பிடிக்குள் இழுத்துச் செல்ல கியூபா மேற்கொண்ட முயற்சிகளைக்கண்டு வெறுப்படைந்த நாடுகளே கம்பூச்சியா விஷயத்தில் விழிப்பாயிருந்து நீதியையும் நியாயத்தையும் நிலைநாட்டியிருக்கின்றன.

எனினும் பிரச்சினை தீர்ந்து விட்டது என்பதற்கில்லை. ஏகாதிபத்தியவாதிகளும், சமூக ஏகாதிபத்தியவாதிகளும் வரலாற்றிலிருந்து படிப்பினைகள் பெற்றுக்கொள்வதில்லை. தோல்வியை ஒப்புக் கொள்ளாமல் சோவியத்- கியூபா- வியட்நாம் கும்பல் தமது ஆதரவு நாடுகளுடன் கம்பூச்சிய விவகாரத்தை பொதுச் சபையில் விவாதிக்கப் பெரு முயற்சிக்கின்றன. இந்தியா போன்ற

ஆக்கிரமிப்பும் அடக்குமுறையும், அக்கிரமமான கொள்ளைகளும் முதலில் பல நாடுகளுக்குத் தெளிவாயிருக்கவில்லை. விடுதலைக்காக நேற்றுப்போராடிய வியட்நாம், இன்று பிறிதொரு தேசத்தை ஆக்கிரமிக்குமா என்ற சந்தேகம் பலருக்கு ஏற்பட்டதில் ஆச்சரியம் எதுவுமில்லை. எனினும் அயல் நாடாகிய சீன நிலைமையைக் கூர்ந்து அவதானித்து வியட்நாமின் அத்துமீறிய போக்கு பேராபத்தான பலவிளைவுகளை உண்டாக்கும் என்று கூறியது. நிலைமையை மெல்ல மெல்ல உணர்ந்த ஆசியான் நாடுகள் அடுத்தபடியாகக் குரல் எழுப்பின. இரக்க உணர்வுடன் வியட்நாமுக்கு உதவி செய்து வந்த ஐரோப்பிய நாடுகள் அடுத்தபடியாக உண்மையை உணர்ந்து வியட்நாமின் விபரீதப் போக்கை வன்மையாகக் கண்டித்து பொருளாதார உதவிகளையும் நிறுத்திக் கொண்டன.

ஹவானாவில் கியூபாவின் அநீதியான- ஒரு தலைப்பட்சமான- நடைமுறைகளினால் கம்பூச்சிய ஜனநாயகக் குடியரசின் நியாயபூர்வமான பிரதிநிதிகளுக்கு ஆசனம் வழங்கப்படவில்லை. எனினும் அதற்கெல்லாம் ஈடு செய்வதுபோல ஐ. நா. பொதுச்சபையில் கம்பூச்சிய ஜனநாயகக் குடியரசின் பிரதிநிதிகளுக்கே உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டிருக்கிறது. சோவியத் யூனியனும் அதன் அடிவருடிகளும் பலபாடுபட்டும் வியட்நாமிய கைப்பொம்மைகளான ஹெங்சமரின் கும்பலை ஐ. நா. சபை ஆசனங்களில் அமர்த்த முடியவில்லை. கெட்டிக்காரன் புளுகு எட்டுநாளைக்குத்தான் என்பார்கள். அதுபோல வியட்

சில நாடுகள் ''நடுநிலை'' வகிப்பதாகப் பாசாங்கு செய்து, கம்பூச்சிய பிரதிநிதித்துவப் பிரச்சினையைப் பின்போட்டு விடலாம் என்று கூறுகின்றன. நீதி, அநீதி, உண்மை, பொய் தர்மம், அதர்மம், எது என்று தெளிவாகத் தெரியும்பொழுது செய்ய வேண்டியதைச் செய்யாமல் பின்போடுவதும், காலங்கடத்துவதும் அநீதிக்கு வக்காலத்து வாங்குவதேயாகும். பெரும்பாலான மூன்றாவது மண்டல நாடுகள் இந்தியாவின் கபடநாடகத்தினால் ஏமாற்றப்படமாட்டா எனறே நம்பலாம். பர்மா தேசத்தின் ஐ. நா. பிரதிநிதி உறுதியாகக் கூறியிருப்பது போல கம்பூச்சியப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டுமானால் வியட்நாம் அந் நாட்டின்மீது தொடர்ந்து ஆக்கிரமிப்புச் செய்வதை விடுத்து தனது இடைச்சகணக்கான துருப்புக்களைத் திருப்பி அழைக்க வேண்டும். இக்கருத்தையே ஐ. நா. விலும் கம்பூச்சியத் தூதுக்குழுத் தலைவர் இயங்ஸாரி வற்புறுத்தியுள்ளார்.

★ ★

### ஆப்கானில் புதியபொம்மை

ஆப்கானிஸ்தானைப்பற்றி இப்பகுதியில் முன்னரும் எழுதியிருக்கிறோம். சில வருடங்களுக்கு முன் தென்கிழக்கு ஆசியால் அமெரிக்கா எவ்வாறு சிக்குண்டு அவலப்பட்டதோ அதைப் போலவே ஆப்கானிஸ்தானிலே சோவியத் யூனியன் சிறைப்பட்டுப் போய்க்கிடக்கிறது என்பதை பலரும் உணர்ந்து வருகின்றனர். விடுதலை வேட்கையும், தன்மானமும், கலாசாரப் பெருமையும், வீரமரவும் ஒருங்கே வாய்க்கப் பெற்ற மலைவாழ் மக்கள் ஆப்கான்கள். அங்கே இராணுவ சதிப்புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றி, தனக்கு அடிபணிந்து நடக்கும் கும்பலைப் பதவியில் வைத்து மகிழ்ந்தது சோவியத் யூனியன். விரைவிலேயே சோவியத் சமூக ஏகாதிபத்தியத்திற்கு எதிர்ப்பு எழுந்தது. சோவியத் கைப்பொம்மையான நூர் முகமத் தராக்கி ஜனங்களின் வெறுப்பைச் சம்பாதித்து நாட்டைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கத் தவறியதும், சதுரங்க ஆட்டத்திலே காய்களை நகர்த்துவது போல சோவியத் சூத்திரதாரிகள் தராக்கியைத் தள்ளிவிட்டு புதிய பொம்மையை தலைமைக்கு நிறுத்த முற்பட்டனர். இதில் வேடிக்கை என்னவென்றால், தராக்கி பதவியிலிருந்து இறக்கப்படுவதற்கு முன்னரே ஐரோப்பிய, ஆசிய பத்திரிகையாளர்கள் சிலர் இது சம்மந்தமாக ஹேஷ்யம் கூறியிருந்தனர். நாமும் தராக்கி ஆட்சி மாற்றப்படக் கூடும் என எழுதியிருந்தோம். அதன்படியே செப்ரம்பர் நடுப்பகுதியில் மற்றொரு சதிப்புரட்சியினால் ஹிபிஜுல்லா அமீன் என்ற இராணுவத் தளபதி அந்நாட்டின் ஜனாதிபதியாக வந்திருக்கிறார். இராணுவப்புரட்சியின் போது தராக்கி துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகியதாக ஊர்ஜிதமாகாத செய்திகள் செப்ரம்பரில் கூறின. ஒக்டோபர் முதல் வாரத்தில் தராக்கியின் மரணத்தை காபூல் வானொலி சுருக்கமாக அறிவித்தது. தராக்கியை விட அமீன் அப்பழுக்கற்ற சோவியத் தாசன். வெளிப்படையாகவே தன்னை மார்க்சிஸ்ட் என்று கூறிக்கொள்பவன். ஆனால் ஆள்மாறினாலும் பிரச்சினை அத்துணை சுலபமாகத் தீரப்போவதில்லை. தென் வியட்நாமிலும், அமெரிக்கர்கள், அடிக்கடி தமது கையாட்களை மாற்றிக் கொண்டிருந்தனர்.

இந்த மாற்றங்களும் நாடகங்களும் பெரும்பாலும் தலைநகரிலேதான். ஏனென்றால் நாட்டின் பெரும்பகுதியான மலைகளையும் பள்ளத்தாக்குகளையும் தேசபக்த படைகள் தம்வசம் வைத்திருக்கின்றன. சோவியத் டாங்கிகளும், ஹெலிகொப்டர்களும், கவச மோட்டார் வாகனங்களும் இன்றைய ஆப்கானிஸ்தான் ஆட்சிக் கும்பலைக் காப்பாற்றிக் கொண்டிருக்கின்றன. அப்படி எத்தனை வருடங்களுக்கு ஒரு நாடு இருக்க முடியும்?

★ ★

### வறியநாடுகளும் வல்லரசுகளும்

கடந்த சில வருடங்களாக உலகின் பல பாகங்களில் சர்வதேச பொருளாதார மாநாடுகள் நடைபெறுவது சர்வசாதாரணமாகிவிட்டது. குறிப்பாக 'அங்ராட்' எனப்படும் ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் வர்த்தக அபிவிருத்தி மாநாடு வருடாவருடம் கூடி கவர்ச்சியான சுலோகங்களையும் பிரமிக்க வைக்கும் புள்ளியியல் விபரங்களையும் வெளியிட்டு வருவதையும் பலர் அவதானிக்கக் கூடும். இலங்கையின் ''தங்க மூளைகளில்'' ஒன்று எனப் புகழப்படும் பிற்போக்குவாதி காமினி கொரியா என்பவரும் மேற்படி மாநாட்டுக்குச் செயலாளராகச் செயல்பட்டு வருகிறார். இவ் வருடத்துக்கான வர்த்தக அபிவிருத்தி மாநாடு பிலிப்பைன்ஸ் தேசத்து தலைநகரான மணிலாவில் நடந்துமுடிந்தது. வர்த்தக அமைச்சர்கள் கூடி நன்கு தயாரிக்கப்பட்ட உரைகளை ஆற்றி, மணிலா நகரத்துக் கேளிக்கைகளையும் ரசித்துவிட்டு தத்தம் நாடுகளுக்குத் திரும்பினர். ஆனால் இம் மாநாடுகளின் உண்மையான நடைமுறை சாதனைகளை ஆராய்ந்து பார்த்தால் பயங்கரமான வெறுமையே தென்படும். செல்வந்த நாடுகளுக்கும் வறிய நாடுகளுக்கும் இடையே உள்ள பாரதூரமான ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்க வழிவகைகள் காண முயல்வதே மாநாடுகளின் நோக்கமாகும். அத்தகைய தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதுமுண்டு. ஆயினும் மூன்று அதிமுக்கியமான விஷயங்கள் குறித்து எத்தகைய முன்னேற்றமும் இதுகாலவரை காணப்படவில்லை. சர்வதேச பொருளாதார அமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்துதல்; வளர்முக நாடுகளின் பிரமாண்டமான கடன்களைக் குறைக்க மார்க்கம் காணுதல்; கைத்தொழில் நாடுகளின் தொழில் நுட்பத்திறனை வளர்முக நாடுகளுக்கு நியாயமான முறையில் வழங்குதல்; இம் மூன்று விஷயங்களிலுமே மூன்றாவது மண்டல நாடுகளின் எதிர்காலமும் சுபீட்சமும் தங்கியிருக்கின்றன. ஆனால் வாயால் கூறினாலும் நடைமுறையில் இவற்றை சாத்தியமாக்க மேலாதிக்க வல்லரசுகள் சிறிதளவேனும் ஒத்துழைக்க மறுத்து வந்துள்ளன,

உதாரணமாக வளர்ச்சி பெற்ற நாடுகள் தமதுமொத்த தேசிய உற்பத்தியில் ஏழுசதவீதத்தை தேர்ந்தெடுத்த உதவிக்காகப் பயன்படுத்த முன்வர வேண்டும் என்று வளர்முக நாடுகள் வேண்டுகோள் விடுத்தன. ஆனால் அமெரிக்காவும் சோவியத் யூனியனும் இவ் வேண்டுகோளை முற்றாக நிராகரித்தன. இதில் வேடிக்கை என்னவென்றால், ''சோசலிச'' நாடான சோவியத் யூனியன், அணிசேரா நாடுகளின் ' இயல்பான நேசநாடு'' என்று கியூபா, வியட்நாம் முதலியன வாய் ஓயாமல் கூறிக்கொள்கின்றன. ஆனால் நியாயமான உதவி என்ற பிரச்சினை வரும்பொழுது சோவியத் யூனிய ஒதுங்கிக்கொள்கிறது, முதலாளித்துவ அமைப்பில் தன்னால் முழுமனதாகப் பங்குபற்ற இயலாது என்று நொண்டிச் சாக்குக் கூறுகிறது.

உலகில் மிகவும் வளர்ச்சி குன்றிய நாடுகளாக முப்பத்தியொரு நாடுகள் கணிக்கப்பட்டுள்ள போதிலும் அவற்றிற்குக் கூட மேலாதிக்க வல்லரசுகள் உதவி வழங்க மறுத்துவிட்டன. இரண்டாம் உலக நாடுகளே ஓரளவு தானும் உதவி செய்ய முன்வந்தன.

உண்மையில் இன்றைய உலகிலே மேலாதிக்க வல்லரசுகள் இராணுவ யுத்த தளபாடங்களை விற்பதிலேயே பெரிதும் அக்கறை காட்டுகின்றன. கடந்த இருபது வருட காலத்தில் சோவியத் யூனியன் மாத்திரம் ஐம்பாயிரம் கோடி டொலர் பெறுமதியான யுத்த தளபாடங்களை உலகின் பல

(6ம் பக்கம் பார்க்க)

**உலகநாடுகளில் முதலாளித்துவப் பாராளுமன்ற முகமூடிகள் கிழித்தெறியப்படுகின்றன!**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

செம்பதாகை — புரட்சிகர வெகுஜன ஏடு

OCTOBER ✠ SEMPATHAKAI ✠ 1979

## அவசரகாலச்சட்டம்

கடந்த மூன்று மாதங்களாக நாட்டின் வட பகுதியில் அவசரகாலச் சட்டம் அமுலிலிருந்து வருகின்றது. இச்சட்டத்தின் கீழ் ''பயங்கரவாதத்தை'' ஒழிப்பதற்கென ஒரு விசேஷப்படைப் பிரிவும் செயல்பட்டு வருகின்றது. பயங்கரவாதம் இவ்அவசரகாலச் சட்டத்தின்கீழ் ஒழிக்கப்படுகின்றதோ இல்லையோ என்பதல்ல நாம் சுட்டிக்காட்ட விரும்புவது. அவசரகாலச்சட்டத்தைப் பாவித்து வடபகுதியின் ஒன்றுமறியாத மக்கள் மனச்சாட்சியற்ற விதத்தில் துன்புறுத்தப்படுவதையே நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

# தணிக்கை

நாம் பயங்கரவாதத்தை ஆதரிப்பவர்கள் அல்லர். அதேபோல் அரசாங்கத்தினதும், ஆயுதப்படைகளினதும் மக்களுக்கு எதிரான துன்புறுத்தல்களையும் ஏற்றுக்கொள்பவர்களும் அல்லர். பயங்கரவாதம் இருக்கின்றதென அரசு நம்புமேயானால், அதை ஒழிப்பதற்கு பயங்கரவாதத்தை புதிய வடிவில் ஏவிவிடுவதல்ல மார்க்கம். பயங்கரவாத நிலைமை தோன்றுவதற்கு ஊற்றுமூலமாக உள்ள பிரச்சினைகளை தீர்த்துவைக்கும்பாதையில் செயற்படவேண்டுமே ஒழிய ஒன்றுமறியாத மக்களை - இளைஞர்களை இம்சைப்படுத்தக் கூடாது. ஆதலால் வடபகுதியிலுள்ள அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டு, ஆயுதப்படைகளின் விஷேசபிரிவு அகற்றப்படல்வேண்டும் எனக் கோருகின்றோம். இதுவே நாட்டின் நல்லெண்ணம் கொண்ட சகலமக்களினதும விருப்பமாகும்.

## இடதுசாரிகளின் ஐக்கிய நடவடிக்கை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

விஜயவீராவின் கண்ணோட்டத்தில் யூ.என்.பியை விடச் சிறிலங்கா சுதந்திரக் கட்சியே இன்று பிரதான எதிரியாகும். இக்கொள்கையானது இன்று யார் யாருக்கு உதவி செய்து வருகிறார்கள் என்பதை மக்கள் முன் நன்கு படம் பிடித்துக் காட்டுகின்றது. மக்கள் விடுதலை முன்னணியின் அம்பலமாகிவரும் யூ, என். பி. சார்பு நடவடிக்கைகளுக்கு ஒரு திரை போடும் முயற்சியாக இவ் ''ஐக்கிய நடவடிக்கைகள்'' மேற்கொள்ளப்படுகின்றதா என்ற சந்தேகத்தையும் மக்கள் முன் கிளப்பிவுள்ளது.

இவற்றை விட இந்த ஐந்து கட்சிகளின் முதல்மூன்று கட்சிகளான திரிபுவாத- சமசமாஜ- மக்கள் விடுதலை முன்னணி ஆகியன தங்களுக்குள் முரண்பட்ட அதே வேளையில் தமது அந்நிய எசமானன சோவியத் சமூக ஏகாதிபத்தியத்திற்கு விசுவாசமானவர்களாகவே உள்ளனர். ஆதலால் அந்த எசமானின் விருப்பத்தில் இருந்து இவ் ''ஐக்கிய முன்னணி'' ஏற்படுத்தப்பட்டதா? என்ற சந்தேகமும் நியாயமானதேயாகும்.

இன்றைய நிலையில் தேசத்தின் நிலைமைகளையும், மக்களின் உண்மையான அபிலாஷைகளையும் பிரதிபலிக்கக் கூடியதான ஒரு பரந்த யூ. என்.பி. எதிர்ப்பு ஏகாதிபத்திய- நவகாலனித்துவ எதிர்ப்பு ஐக்கிய முன்னணி ஒன்றே அவசியமாகும் இதில் குறுகிய நோக்கத்திற்கோ அல்லது ஆளும் வர்க்கத்தின் தலையீடுகளுக்கோ அப்பாற்பட்ட உண்மையான தேசபக்த சக்திகளையும், புரட்சிகர -முற்போக்கு சக்திகளையும் கொண்ட ஒரு வலுவான ஐக்கிய முன்னணியே எமது நாட்டு மக்களின் முன்னால் உள்ள அவசியத் தேவையாகும்.

## 55 ரூபா சம்பளஉயர்வு கொடுக்க......

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

வாறு தம்மை வளம்படுத்திக்கொள்வதற்கு இந்த முதலாளிகளால் உறிஞ்சப்படும் தொழிலாளர்களுக்கு ஆகக்குறைந்தளவான 55 ரூபா சம்பள உயர்வைக் கொடுக்க மறுக்கும் கொடூர முதலாளிகளுக்கு எதிராகத் தொழிலாளர்கள் ஐக்கியப்பட்ட நடவடிக்கைகளுக்கு தயாராக வேண்டும். வளர்ந்துவரும் வாழ்க்கைச் செலவும், முதலாளிகளின் கொடூரச் சுரண்டலும், அரசின் அடக்குமுறைகளும் தொழிலாளர்களை ஐக்கியப்பட்ட போராட்டங்களுக்கே இட்டுச்செல்வதற்கான சூழ்நிலையை உருவாக்கியுள்ளது, எனவே 55ரூபா சம்பள உயர்வை மறுக்கும் சகல முதலாளிகளுக்கும் எதிரான நடவடிகைகளை எடுப்பதற்குச் சகல முயற்சிகளும் செய்யப்படவேண்டியது அவசிய மாகும்.

# மந்திரிசபை மாற்றத்தால் மக்கள் பிரச்சினைகள் தீராது!

தற்போதைய யூ.என்.பி. மந்திரி சபையில் மாற்றங்கள் ஏற்பட இருப்பதாகவும், அம்மாற்றங்களினால் புதியவர்கள் பலர் மந்திரி சபைக்கு வர இருப்பதாகவும் செய்திகள் அடிபடுகின்றன. அரசாங்க வட்டாரங்களிலிருந்து கிளப்பப்பட்டுள்ள இச்செய்தி மக்கள் மத்தியில் ஒரு பிரமையை ஏற்படுத்தும் நோக்கம் கொண்டது என்றே கூற வேண்டும். அதாவது தீர்க்க முடியாத பல பிரச்சனைகள் மந்திரிசபை மாற்றத்தோடு தீர்த்து வைக்கப்படும் என்ற ஒரு நப்பாசையை மக்களுக்குக் காட்டும் பிரமையே அதுவாகும். ஆனால் உண்மை யாதெனில், எப்படித்தான் மந்திரிசபையில் மாற்றங்களை கொண்டுவந்தாலும் வளர்ந்து வரும் எந்தப் பிரச்சினைகளையும் யூ. என். பி யாலோ, அதன் மாற்றம் பெறும் மந்திரி சபையாலோ அல்லது சகலதும் ''நானே'' எனக் கூறிவரும் ஜே.ஆர். ஜயவர்த்தனவாலோ தீர்க்க முடியாது. இன்று மந்திரிகள், பிரதிமந்திரிகள், மாவட்ட மந்திரிகள் எல்லாம் சேர்த்துப் பார்த்தால் கிட்டத்தட்ட எண்பது பேர்களுக்குமேல் உள்ளனர். இவ்வளவு தொகையான மந்திரிகள் இருந்தும் எந்த ஒரு பிரச்சினையும் தீர்வதற்கான அறிகுறி தென்படவில்லை. நிலைமை அவ்வாறு இருக்க தற்போதைய மந்திரி சபையில் மாற்றம் ஏற்படுவதால் மட்டும் எந்தப் பிரச்சினையும் தீரப்போவதில்லை. இது தலையிடிக்கு தலையணையை மாற்றினாலும் தலையிடி தீரப் போவதில்லை'' என்பது போன்றதாகும்.

முதலாளித்துவப் பாராளுமன்ற அமைப்புக்களைக் கொண்ட நாடுகளில் ஏற்படும் மோசமான பொருளாதார நெருக்கடிகளுக்கும், வேலையின்மை கல்வியில் சீரழிவு போன்றவற்றிற்கும் தீர்வு காண முடியாத ஆளும் வர்க்கங்கள் மக்களின் கவனத்தை திருப்பவும் அல்லது மக்களின் எதிர்ப்பை சிறு அளவுதானும் சாந்தப்படுத்தவும் இவ்வித மந்திரிசபை மாற்றம்பற்றி ஆரவாரம் செய்வது வழமையானதாகும், இந்த வழமையை இலங்கையின் தற்போதைய யூ.என்.பி. ஆளும் வர்க்கமும் பின்பற்றியே தனது மந்திரி சபையில் மாற்றம் என்ற புலுடாவை ஆரவாரப்படுத்துகின்றது. மந்திரி சபையில் அல்லது ஜே. ஆர் ஜெயவர்த்தனவின் இளைஞர்களுக்கு மந்திரிப் பதவி என்ற ஏமாற்றோ எமது மக்களை எவ்விதத்திலும் ஏமாற்றமாட்டாது. அவ்விதமான மாற்றமானது அம்பலமாகிவரும் யூ.என்.பி. யினதும் ஜே. ஆரினதும் சுயரூபத்தை எவ்விதத்திலும் மறைக்கப் போவதில்லை என்று நிச்சயப் படுத்திக் கூற முடியும்.

## யூ. என். பியும் தமிழர் கூட்டணித்......

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒற்றுமையை வலுப்படுத்துகின்றது- தமிழ்க் தலைவர்களோ யூ. என் பியின் அரவணைப்பில் இன்ப சுகம் அனுபவிக்கின்றனர். தமிழ்த் தலைவர்களை நம்பிய தமிழ் மக்களோ நாளாந்தம் புதுப்புது சோதனைகளுக்கும் இன்னல்களுக்கும் ஆளாக்கப்படுகின்றனர்.

யூ. என். பி. தமிழ்த் தலைவர்களின் வர்க்க ஒற்றுமையை தமிழ் மக்கள்- இளைஞர்கள் இன்று அனுபவ பூர்வமாக உணருகின்றனர். அதனால் தமிழர் கூட்டணித் தலைவர்களின் யூ. என். பி. ஆதரவுநடவடிகைகள் கடும் விமர்சனங்களுக்கும், கண்டனங்களுக்கும் உள்ளாகி உள்ளது. இன ரீதியில் அமைந்த பல கசப்பான சம்பவங்கள் இருக்கின்ற அதே வேளை அவற்றையும் மீறி வர்க்க ரீதியாக இருபகுதியினரும் பல்வேறு விடயங்களில் ஐக்கியப்பட்டிருப்பதையே காணக் கூடியதாக இருக்கின்றது. இவ் இருபகுதியும் சாதாரண சிங்கள- தமிழ் மக்களை வர்க்க ரீதியில் ஒன்றுபடுவதை திட்டமிட்டே தடுத்து வரும். அதே வேளை தமது உயர் வர்க்க ஐக்கியத்தை மேன்மேலும் வலுவாக்கி வருகின்றனர். இதை இன்றுள்ள சூழ்நிலையில் மிகவும் நாசுக்காகவும் இரகசியமாகவும் தமிழ்த் தலைவர்கள் செய்து வருகின்றனர். கண்ணை மூடிக் கொண்டு பூனை பாலைக் குடித்தால் மற்றவர்கள் அறிய மாட்டார்கள் என்ற நிலையில் தான் தமிழ்த் தலைவர்கள் யூ. என். பித் தலைவர்களோடு நடந்துகொள்கின்றனர். நாடு முழுவதிலும் யூ. என் பி. யின் பொருளாதார நெருக்கடிகளினால் மக்கள் வெறுப்பும் விரக்தியும் அடைந்துள்ள வேளை இன ரீதியான பாகுபாடு, புறக்கணிப்பு ஆதியவற்றையும் சேர்த்து தமிழ் மக்கள் யூ. என். பி ஆட்சிக்கு தமது கடும் வெறுப்பையும், எதிர்ப்பையும் தெரிவிக்கின்றனர். அவ் வேளை மக்களுடைய வெறுப்புக்கு ஆளாகி உள்ள யூ. என். பியுடனான தமிழ்த் தலைவர்களின் வர்க்க ஐக்கியத்தையும் தமிழ் மக்கள் நல்ல வெளிச்சத்தில் கண்டு கொண்டே வருகின்றனர்.

## தொழிற்சங்கத்தலைவருக்கு......

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

கள்மீது கட்டவிழ்த்து விடப்படும் சகல அடக்குமுறைகளுக்கும் அரசாங்கமே பொறுப்பேற்றுக் கொள்ளல் வேண்டும். காலத்திற்குக் காலம் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு அரசினதும் தோட்ட நிர்வாகங்களினதும் பதில் துப்பாக்கிச் சூடும், அடக்குமுறைகளுமாகவே இருந்து வந்துள்ளது. இன்றும் அந்நிலையே நீடிக்கின்றது.

தோட்டத் தொழிலாளர்களின் ஏகப்பிரதிநிதி எனப்படும் தொண்டமான் அவர்களை இன்றைய அரசு மந்திரியாக்கிவிட்டது என்றும், இனிமேல் தோட்ட தொழிலாளர்கள் சொர்க்கத்தில் வாழப் போகிறார்கள் என்றெல்லாம் கூப்பாடுகள் போடப்பட்டது. தோட்டத் தொழிற்சங்கத் தலைவர்களான தொண்டமானுக்கும், செல்லச்சாமிக்கும் உயர்பதவிகளும் கௌரவங்களும் கிடைத்தது உண்மையே. அதே வேளை தோட்டத் தொழிலாளர்களுக்குக் கிடைத்திருப்பதோ துப்பாக்கிச் சூடும், அடக்குமுறைகளும் மட்டுமே.

இன்று மலையகத்தில் தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்கியுள்ள அடக்குமுறைகளையும், அநீதிகளையும், தோட்ட நிர்வாகங்களின் துப்பாக்கிச் சூடுகளையும் வெறும் தொழிற்சங்கக் கண்டனங்களாலேலா அல்லது நீண்ட மகஜர்களாலோ மட்டும் தடுத்து நிறுத்த முடியாது. அதேபோல் ஆளும் வர்க்கத்தினரோடு கூடி குலாவி வரும் வர்க்க சகாக்களான பெரும் தொழிற்சங்கத் தலைவர்களை நம்புவதாலும் தோட்டத் தொழிலாளர்கள் விமோசனம் பெற முடியாது. இதை விட ஒரே ஒரு மாற்று வழியான புரட்சிகர அரசியல் மார்க்கத்தில் தோட்டத் தொழிலாளர்கள் உணர்வு பெற்று, முன் செல்லவேண்டும். இந்நாட்டில் அடக்கி ஆளப்படும் சகல தொழிலாளர்களோடும் ஒன்றிணைந்து இந்நாட்டின் உண்மையான விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொள்ளும் புரட்சிகர அரசியல் பாதையில் அணிதிரள்வது ஒன்றுமட்டுமே தோட்டத் தொழிலாளர்கள் தம்மை எதிர்நோக்கும் சகல அடக்குமுறைகளையும் எதிர்ப்பதற்கும் முறியடிப்பதற்கும் உள்ள சரியானன வழியாகும்.

## எமது அனுதாபம்

கிட்டத்தட்ட இருபது வருடங்களாக இலங்கை-சீன நட்புறவுச் சங்கத்தின் பல பொறுப்பான பதவிகளை வகித்தவரும், தற்போதைய நிர்வாகத்தில் பொருளாளராகவும் இருந்த திரு. சுதர்மன்த சில்வா அண்மையில் காலமாகிவிட்டார். அவரது மறைவைக் குறித்து நட்புறவுச் சங்க நிர்வாகத்திற்கும், அவரது குடும்பத்தினருக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(7 ம் பக்கத் தொடர்ச்சி )

நாடுகளுக்கு உதவியாகவும், விற்பனையாகவும், சலுகையாகவும் வழங்கியுள்ளது. அபிவிருத்திக்கு அல்ல. ஏகாதிபத்திய நாடும் சரி பிரமாண்டமான விற்பனைகளை யுத்த தளபாடங்களிலேயே செய்கின்றன. அதனால்தான் யுத்த அபாயமும் பெருகியிருக்கிறது. கால்மார்க்ஸ் அன்றே சொன்னார். ''யுத்தம் உலகில் இல்லாமல் போக வேண்டுமாகில் யுத்த தளபாடங்களினால் இலாபம் சம்பாதிப்பது இல்லாமல் இருக்க வேண்டும்.'' ஏகாதிபத்தியமும் சமூக ஏகாதிபத்தியமும் இருக்கும் வரையில் அந்நிலை வரமுடியுமா?

அச்சுப்பதிப்பு: யாழ்ப்பாண அச்சகம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். வெளியிடுபவர்: சி. நவரத்தினம் 15/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org